Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389

National Tamil Daily தேசிய தினசரி

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது மாசி 22 ஆம் நாள் ஷவ்வால் 9 (6-3-63) தபாற் பெட்டி எண் 49

புதன்கிழமை இதழ் 25

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

# பத்திரிகை மசோதா நிராகரிக்கப்பட்டது!

## புதிய மசோதா தயாரிக்க 9 பேர் அடங்கிய கமிட்டி தெரிவு

### அரசாங்க பாராளுமன்றக் குழு மேற்கொண்ட நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்

**இன்று காலை கூடிய அரசாங்கப் பாராளுமன்றக் கட்சிக் கூட்டம், நீதி மந்திரி திரு. ஸாம் பி. ஸி. பெர்னுண்டோவினுல் சமர்ப்பிக்கப்பட்ட பத்திரிகை மசோதா நகலை முற்ருக நிராகரித்தது.**

திரு. ஜோர்ஜ் ராஜபக்ஷவினுல் பிரேரிக்கப்பட்டு, திரு. சோமவீர சந்திரசிறியினுல் ஆமோதிக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் இது நிராகரிக்கப்பட்டது.

இது வரை சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு பத்திரிகை மசோதாக்களை ஆராய்ந்து, அரசாங்கத்தின் கொள்கைக் கேற்ப ஒரு மசோதாவைத் தயாரிக்கும் பொருட்டு 9 பேர் அடங்கிய கமிட்டி ஒன்றை அரசாங்க பாராளுமன்றக் குழு நியமித்தது. ஒரு மாதத்திற்குள் அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு புதிய கமிட்டி கேட்டுக் கொள்ளப்பட்டது.

நீதி மந்திரி திரு. ஸாம் பி. ஸி. பெர்னுண்டோ தலைமையில் திரு. இலங்கரத்தின, திரு. ஷெல்டன் ரணராஜ, திரு. சோமவீர சந்திரசிறி, திரு. ஜயபதிரான, திரு. ஸி. டி. எஸ். சிறிவர்த்தன, திரு. ஏ. எம். ஏ. அஸீஸ், திரு. டி. பி தென்னக்கூன், திரு. கே. சூரியாராச்சி ஆகியோர் இக் கமிட்டிக்கு நியமிக்கப்பட்டனர்.

பத்திரிகை மசோதா விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது திரு. ராஜபக்ஷ பேசுகையில், ஜனநாயகத்தின் பேரால் இம் மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதென்றும், அதை ஜனநாயகத்தின் பேரால் தாம் ஆட்சேபிப்பதாயும் கூறினர்.

## தேயிலை விலை இறக்கம்

கொழும்பு, செவ்வாய்

தாழ்ந்த பிரதேசத்தில் பயிர் செய்யப்படும் தேயிலையினதும், மத்திய பிரதேசத்தில் பயிர் செய்யப்படும் தேயிலையினதும் விலை சராசரி 15 சதம் வரையில் குறைந்துள்ளது. இந்திய அரசாங்கம் தேயிலைக்கு விதிக்கும் வரியை ரத்து செய்ததின் பின்னர் முதல் முறையாக நேற்று நடைபெற்ற தேயிலை ஏல விற்பனையில் இலங்கை மத்திய பிரதேச, தாழ்ந்த பிரதேச தேயிலைகளின் விலை சராசரி 15 சதம் வரையில் குறைந்துள்ளது.

---

## இன்று தீர்மானிக்கப்படும்?

கொழும்பு, புதன்

பெட்ரோலியம் பொருட்களை தாம் தொடர்ந்து இறக்குமதி செய்ய விரும்புகின்றனவா இல்லையா என்பதுபற்றி எண்ணைக் கம்பனிகள் உறுதியான பதிலை அனுப்பி வைக்காவிடில் என்ன செய்வதென்பது பற்றி அரசாங்கம் இன்று தீர்மானிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கம் இதுபற்றி ஆலோசிப்பதற்கு கூடும்பொழுது எண்ணைக் கம்பனிகள் உறுதியான பதில் அனுப்பி வைக்கத் தவறினுல் அவர்கள்மீது என்தெந்த நடவடிக்கைகளை எடுப்பது என்பது பற்றியும் ஆராயப்படும்.

## ஐ. நா. உணவு, விவசாய ஸ்தாபனத்தின் உதவி

### இலங்கை கோரும்

கொழும்பு, செவ்வாய்

**ஐக்கிய நாடுகள் உணவு விவசாய ஸ்தாபனத்திடம், தனக்கு உதவிதருமாறு இலங்கை கேட்கவிருக்கின்றது. உலக உணவுத் திட்டத்தின் கீழேயே இந்த உதவி கேட்கப்படவிருக்கின்றது.**

(8-ம் பக்கம் பார்க்க)

## நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது

### உதவி மேயர் மீது

யாழ்ப்பாணம், புதன்

**யாழ்ப்பாணம் உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை 4 மணிநேர விவாதத்தின் பின் நிறைவேற்றப்பட்டது. பிரேரணைக்குச் சாதகமாக எட்டுவாக்குகளும், பாதகமாக ஆறு வாக்குகளும் கிடைத்தன. காதி எம். எம். சுல்தான் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை.**

கூட்டம் ஆரம்பமான போது திரு. என். தேவபாலசுந்தரம் சொற்பிரயோகம் சம்பந்தமாகக் கொண்டு வந்த ஒழுங்குப் பிரச்சனையை கூட்டத்திற்கு தலைமைவகித்த கமிஷனர் நிராகரித்தார். நம்பிக்கையில்லாத்தீர்மானத்தை திரு. அ. நடராசா பிரேரித்தார். திரு பீ. ச. சோமசுந்தரம் அனுமதித்தார்.

உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கத்தின் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கான பிரேரணை பற்றி விவாதிக்க மாநகரசபையின் விசேஷ கூட்டம் நேற்றுமாலை நடைபெற்றது. இந்த விசேஷ கூட்டத்தை கமிஷனர் திரு. டி.டி. ஜெயசிங்கா ஒழுங்கு செய்திருந்தார்.

உதவிமேயர் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம், திருவாளர்கள் சோ. இராசரத்தினம், அ. நடராசா, பீ. ச. சோமசுந்தரம், ஜே எஸ். அழகையா, பி. எம். ஜோன், நா. த. செல்லத்துரை, டி. எஸ். துரைராஜா, ஆகியோர் கைச்சாத்திட்டு அனுப்பியிருந்தனர்.

பிரேரணை பிரேரிக்கப்பட்ட போது திரு. என். தேவபாலசுந்தரம் ஒழுங்குப்பிரச்சனையொன்றினை கிளப்பினர். பிரேரணையில 'துணை'முதல்வர் என்று குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அச் சொற்பிரயோகம் 'டெப்யூட்டி' மேயர் என்னும் பதத்தைக் கருதாது என்றும் எனவே இப்பிரேரணை செல்லுபடியாகதெனவும் கூறினர்.

கமிஷனர் திரு. டி. டி. ஜயசிங்கா திரு. தேவபாலசுந்தரம் கொண்டுவந்த ஒழுங்குப் பிரச்சனையை நிராகரித்தார். அவர் தமது தீர்ப்பில் கூறியதாவது: "பிரேரணை ஆங்கிலத்தில் தான் கொண்டுவரப்பட்டது. துணைமாநகரசபை முதல்வர் என்பது இச்சபையில் வேலைசெய்பவர்களின் மொழிபெயர்ப்பு, இந்ததுணை முதல்வர் என்பது இச்சபையின் பாவனையில் இருந்து வந்துள்ளது. திரு. துரைராஜசிங்கம் தெரிவு செய்யப்பட்ட போது துணை மா முதல்வர் என்றே தமிழில் அழைக்கப்பட்டார். தென்னிந்தியாவிலும் துணைமுதல்வர் என்றுதான் வழக்கில் இருந்து வருகிறது என்பதனையும் மொழி பெயர்ப்பாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளார்ர்கள். எனவே இந்த ஒழுங்குப் பிரச்சனையை நிராகரிககிறேன்."

இதன் பின்னர் திரு. கே. எஸ். நடராசா நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர். அவர் பேசுகையில் 'எதிர் காலத்தில் பதவிக்காக ஆசைப்படும் சிலரால் தான் இந்த நம்பிக்கை

8-ம் பக்கம் பார்க்க

புகையிலை — மிளகாய் — கத்தரி — முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும் சுறுணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு

மெற்றசிஸ்ரொக்ஸ்

METASYSTOX

T'GRAMS: ROYAEL ROYAL DISPENSARY PHONE: 397 JAFFNA

## ...ரி விளம்பரம்

### தவறி விட்டது
தருபவர்க்கு வெகுமதி

ஊர்காவற்றுறை றெக்கு வெலைக் கோட்டின் 8349-ம் இலக்க வழக்குக் கொப்பிகள், உறுதிகள் மற்றும் பல சென்ற 1-3-63 வெள்ளிக்கிழமை 10 மணியளவில் யாழ்ப்பாணம் பெரியகோட்டின் முன் தெருவில் கை தவறி விட்டது. அதைக் கண்டெடுத்தவர் தயவு செய்து திருப்பித்தந்தால் மிக்க நன்றியாயிருப்பதுமல்லாமல் தக்க சன்மானமும் அளிக்கப்படும்.

I Arumainayagam, Proctor, S C. & Notary, 139, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

744

### விற்பனைக்கு

முந்திரிகை கன்றுகள் Red Variety) உயர்தர சிகப்பு இன இனிப்புப், பழரக, கன்றுகள். ஒன்றின் விலை 5 ரூபாய். இ. கிருஷ்ணசாமி, திருநெல்வேலி ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி. 738

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணநந்தர் கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

மன்னார் வைத்தியசாலையில் கடமையாற்றும் திரு. W. டோமினிக் அவர்களின் தந்தை திரு. K. ஜக்கரயாஸ் 2-3-63ல் தேகவியோகமானர். ஈமக்கிரியைகள் 3-3-63ல் பெரிய மாதா கோவில் மயானத்தில் நடைபெற்றது. காரியதரிசி, கி. ம. ச. கமிற்றி. 746

## இ. போ. ச. விற்கு நாலு சிபார்சுகள்

கொழும்பு, திங்கள்

இ. போ. ச. நிர்வாகம் தொழிற் சங்கங்களுடன் உடனடியாக பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என இலங்கைத்தொழிலாளர் சம்மேளனப் பொதுக்காரியதரிசி திரு. என். சண்முகதாசன் இன்று காலை யோசனை கூறியுள்ளார். தற்போது இ. போ. ச. விலுள்ள சிக்கல்களைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம்பிப்பது அவசியம் என திரு. சண்முகதாசன் குறிப்பிட்டார்.

திரு. சண்முகதாசன் தெரிவித்த நான்கு ஆலோசனைகளும் வருமாறு:-

வேலை நிறுத்தம் செய்யப்படுவதற்கு முன்னர் சாரதிகள் ஓடியபாதைகள் யாவும் புஸ அவர்களுக்கு திருப்பிக் கொடுக்கப்படவேண்டும்.

வேலை நிறுத்தத்தின்போது நடைபெற்ற சம்பவங்களையொட்டி தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டவர்களின் தற்காலிக வேலை நீக்க உத்தரவுகள் தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

பொலிசார் தொடர்ந்த வழக்குகள் யாவும் வாபஸ செய்யப்படவேண்டும்.

தொழிற்சங்கங்கள் கேட்கும் கோரிக்கைகளை நிறைவேற்ற உடனடியாக அவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டும்.

## செய்தித் திரட்டு

### நீதியரசருக்கு விருந்து

பருத்தித்துறை, செவ்வாய்

நீதியரசர் திரு. பொ. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கட்கு பருத்தித்துறை ரோட்டறிக் கிளப்பினர் கிளப் மண்டபத்தில் தேநீர் விருந்தளித்துக் கௌரவித்தனர்.

கிளப் தலைவரும் ஹாட்லிக் கல்லூரி அதிபருமான திரு. கே. பூரணம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இவ்விருந்தில் அங்கத்தவர்கள் உட்பட பல பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

வடமராட்சிப் பகுதிக் காரியாதிகாரி திரு. யே. டி. ஆர்னல்ட் நன்றி கூறினர்.

∴ ∴ ∴

### பஸ் சாரதி வீதியில் மரணம்

பருத்தித்துறை, செவ்வாய்

இ. போ. சபைச் சாரதியான பருத்தித்துறையைச் சேர்ந்த க. தங்கவேலாயுதம் என்வர் பருத்தித்துறையில் இருந்து தலையடிக்குச் சென்ற பஸ்ஸை செலுத்திக்கொண்டு போகையில் இடைத்தூரத்தில் பிரயாணிகளுககிடையே ஏற்பட்ட குழப்பத்தை தவிர்க்க கீழே இறங்கிய போது மயக்க முற்று விழுந்ததாயும் வைத்தியசாலையில் அனுமதித்த சில நிமிடங்களில் மரணம் அடைந்ததாயும் கூறப்படுகிறது.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. க. சப்பிப்பிள்ளை மரணவிசாரணை நடாத்தி பிரேத பரிசோதனையின் பின் இரு தயத்துடிப்பு நின்றதால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்புக் கூறினர்.

∴ ∴ ∴

### ஆலயத்தில் சொற்பொழிவு

பருத்தித்துறை, செவ்வாய்

பருத்தித்துறையைச் சேர்ந்த அத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை தமிழ்விரிவுரையாளர் திரு. பொ கிருஷ்ணபிள்ளை திருமுறைகள் என்னும் பொருள் பற்றி சொற்பெருக்காற்றினர்.

∴ ∴ ∴

புலோலி மேற்கு பண்டாரி அம்மன் ஆலயத்தில் மன்னர் மகாவித்தியாலய ஆசிரியை செல்வி கந்தையா கணேசநாயகி சிவசரிதை என்னும் பொருள்பற்றி உபன்னியாசம் செய்தார்.

∴ ∴ ∴

### இடமாற்றம்

பருத்தித்துறை, செவ்வாய்

சின்னையா ஞாபக பாடசாலை ஆசிரியர்கள் திரு. பொ. செல்லையா, திரு. இ. ஆறுமுகம் ஆகியோர் முறையே கரவெட்டி யாக்கரு வித்தியாசாலை, செம்பியன் பற்று அரசினர் பாடசாலை ஆகியவற்றுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

∴ ∴ ∴

### அதிபர் சேவைக்கு பாராட்டு

ஊர்காவற்றுறை, திங்கள்

"கடமையுணர்ச்சியும், திறமையும், சேவை செய்வதில் நல்லார்வமும், தியாகவாழ்வுமுடைய ஒரு அதிபராக அவர் வாழ்ந்து காட்டினர். கடமைக்கு அப்பால் அவர் புரிந்த சேவை நலத்தால் நம் கல்லூரியும், தீவக மாணவர் சமூகமும் பெரும் முன்னேற்றத்தை யடைந்துள்ளன". வேலணை அரசினர் மத்திய கல்லூரியில் சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாகப் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றி சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்ட அதிபர் திரு. வி. தம்புவைப் பாராட்டி நடைபெற்ற பிரிவுபசாரக் கூட்டத்தில் பேசுகையில் பண்டிதர், க. இராசையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

## ஆசிரியருக்குக் கடிதம்

# சிங்கள மொழியில் விஞ்ஞான போதனை

சிங்கள மொழியில் விஞ்ஞானம் கற்பதற்குப் போதிய ஆசிரியர்களில்லை. அப்பற்றுக் குறையை தமிழ்ப் பட்டதாரிகளுக்கு சிங்களமொழியில் மொழியில் பயிற்சி கொடுத்து நியமிப்பதன் மூலம் தீர்க்கலாமென்று இலங்கை ஜாதிககுரு சங்கம் ஆலோசனை கூறியுள்ளது. இது ஏற்கப்படுமாயின் பின்வரும் மூன்று பலன்களும் ஏற்படும்.

முதலாவது, சிங்களமாவர்ணகளுக்கு அவர்களின் எதிர்கால முன்னேற்றத்திற்கு மிக அவசியமான விஞ்ஞானக் கல்வியைத் தகுந்த முறையிலும், விரைவாகவும் பெற வாய்ப்பு ஏற்படும்.

இரண்டாவது, வேலையற்றிருக்கும் 300 தமிழ் விஞ்ஞான பட்டதாரிகளுக்கு வேலை பெறும் வாய்ப்பு உண்டாகும். சிங்கள மொழி கற்று உத்தியோகம் பெறுவதா என்று கருதுவது இங்கு பொருத்தமற்றது.

மூன்றாவது, குருசங்கம் மிகச் சரியாகக் குறிப்பிட்டிருப்பதுபோல், இது சிங்கள-தமிழ் இனத்தவரிடையே நல்லெண்ணத்தை வளர்க்க உதவும். தற்போதுள்ள நிலையில் இதுவே மேற்குறிப்பிட்ட இரண்டிலும் கூடிய முக்கியத்துவம் வாய்ந்தது.

சுயமொழி மூலம் கல்வி கற்பதனல், சிங்கள, தமிழ்மொழிப் பாடசாலைகளிடையே தொடர்பு குறைந்துவிட்டது. விஞ்ஞான பாடங்களை ஆங்கிலம் மூலம் கற்கும் தற்போதைய நிலை நாளடைவில் மறைந்துவிட, இத்தொடர்பு வெகுவாகக் குறைந்துவிடும். தேசிய ஒற்றுமைக்கு அத்தகைய நிலை உகந்ததல்ல. தேசிய ஒற்றுமைக்கான இயக்கத்தில் பாடசாலைகளின் பங்கு மிக முக்கியமானது. அதனல் இந்த ஆலோசனை ஏற்கப்பட்டால் அத்தொடர்பு மேற்கொண்டும் இருந்து நல்லெண்ணத்தை வளர்க்கும்.

நான் இவ்வாலோசனையிலும் ஒருபடி மேலே சென்று, சிங்கள-தமிழ்ப் பாடசாலைகளிடையே ஆசிரியர் பரிமாற்றம் அனலைதீவு எல்லாப் பாடங்களிலும் நடைபெறவேண்டுமென வற்புறுத்த விரும்புகின்றேன். சிங்கள மொழியில் கற்பிக்கக்கூடிய தமிழாசிரியர்கள் சிங்களப் பாடசாலைகளுக்கும், அங்ஙனமே தமிழ் கற்பிக்கக்கூடிய சிங்கள ஆசிரியர்கள் தமிழ்ப் பாடசாலைகளுக்கும் மாற்றம் செய்யப்படலாம். அதிகாரத்திலுள்ளவர்கள் மனம்வைத்தால் இரு இனத்தவரிடையேயுமுள்ள ஆசிரியத் தொழில் வாய்ப்புகளுக்கு ஊறு செய்யாமலே இப பரிவர்த்தனை நடைபெற ஒழுங்குகள் செய்யலாம். இந்தியாவில் பல்கலைக்கழக மானியக்க மிஷனும் தேசிய ஒருமைப்பாடு மகாநாடும் இத்தகைய பரிவர்த்தனை தேசிய ஒற்றுமைக்கு மிக அவசியமென வற்புறுத்தியிருக்கின்றன.

இத்தகைய நல்ல ஆலோசனையை முன்வந்து கூறிய இலங்கை ஜாதிக குருசங்கம் பாராட்டுக்குரியது.

'அனுதாபி'

## ரஷ்ய மாலுமி பிணையில் விடுதலை

புதுடில்லி, மார்ச் 5

எண்ணெய்க் கப்பலில் இருந்து 700 ரூபா திருடிய வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்டதாக இந்தியாவில் காவலிருந்த ரஷ்ய மாலுமி தரசோவ் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.





நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TA/1...

# நித்திரையைக் கெடுப்பதால் நள்ளிரவில் விமானம் இறங்க ஜப்பான் தடை!

டோக்கியோ, மார்ச் 5

டோக்கியோ சர்வதேச விமானநிலையத்தில் நள்ளிரவில் விமானங்கள் வந்திறங்குவதும் புறப்பட்டுச்செல்லுவதும் தங்களுக்கு நித்திரையைக்கெடுத்து உடல்நிலையைப் பாதிக்கிறதென்று விமானநிலையத்துக்குச் சமீபத்திலுள்ள மக்கள் ஜப்பான் அரசாங்கத்துக்கு முறையிட்டனர். பெரிய 'ஜெட்' விமானங்கள் நள்ளிரவில் வந்திறங்குவதும் புறப்பட்டுச் செல்லுவதும் பேரிரைச்சலைக் கொடுக்கின்றதென்று அவர்கள் புகார் செய்திருந்தனர். மக்களின் இப்புகார் காரணமாக நள்ளிரவில் டோக்கியோ விமானநிலையத்தை 'ஜெட்'விமானங்கள் உபயோகிப்பதற்கு ஜப்பான் அரசாங்கம் தடைவிதித்துள்ளது. இரவில் விமானநிலையம் மூடப்பட்டிருக்கும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது. விமானக் கம்பனிகள் தங்கள் விமானப்பிரயாண நேரத்தை இதற்குத் தக்கதாக மாற்றிக்கொள்வதற்கும் வேறுவசதிகள் செய்துகொள்வதற்கும் வசதியாக ஒக்டோபர் முதல்திகதிவரை அவகாசம் கொடுக்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

# வேறு தொழிலில் பயிற்சி

## பொற்கொல்லர் குழந்தைகளுக்கு

புதுடில்லி, மார்ச் 5

நகைத் தொழிலாளரின் குழந்தைகளுக்கு வேறு தொழில்களில் பயிற்சி அளிப்பது சம்பந்தமாக அரசாங்கம் ஆலோசனை செய்துவருகின்றதென்றும், இதுபற்றி ராஜ்ய அரசாங்கங்களுடன் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறதென்றும் இந்திய நிதிமந்திரி திரு. மொரார்ஜிதேசாய் நேற்று காங்கிரஸ் பார்லிமெண்டரிக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

நாட்டிலுள்ள நகைவியாபாரிகளின் மொத்தத் தொகை நான்கு அல்லது ஐந்து லட்சம் தானென்று நிதி மந்திரி கூறினார்.

நகைக் கட்டுப்பாட்டுவிதி ஆலோசனைக் கமிட்டியில் நகைத்தொழிலாளர்களுக்கும் இடம் அளிக்கப்படும் என்று திரு. தேசாய் தெரிவித்தார்.

தங்கக் கள்ளக் கடத்தலைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன்னரே திட்டமிட்டு வந்ததென்றும் நெருக்கடிகால் நிலைமை அதைத் துரிதப்படுத்திவிட்டதென்றும் திரு. தேசாய் கூறினார்.

# வான்வெளியில் குரங்குகள்

## 30 நாட்களுக்கு இருக்குமாம

சான்பிரான்சிஸ்கோ, பெப். 4

வானவெளிக்கு குரங்குகளையும், தாவரங்களையும் அனுப்ப ஒழுங்குகள் நடைபெற்றுவருகின்றன. செயற்கைக் கிரகங்களில் குரங்குகளை வைத்து முப்பது நாட்கள் வானவெளியில் சுற்றிவருவது சம்பந்தமாக ஏமெஸ் ஆராய்ச்சி நிலையத்தில் விரைவில் ஆராய்ச்சி நடைபெறவிருக்கிறதென்றும் குரங்குகளையும், தாவரங்களையும் ஆறுசெயற்கைகிரகங்களில் வைத்து அனுப்புவது சம்பந்தமாக ஆராய்ச்சி நடைபெறுகிறதென்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

# கொழும்புயோசனை; ஈராக் ஆதரவு

நியுயோர்க், மார்ச் 5

இந்திய-சீன எல்லைப் பிரச்னைக்கு சமரசத் தீர்வுகாணு முகமாக கொழும்பு மகாநாடு தெரிவித்த யோசனைகளை ஈராக் அரசாங்கம் ஆதரிப்பதாக ஐ. நா. விலுள்ள ஈராக் பிரதிநிதி பச்சாச்சி தெரிவித்தார்.

நடுநிலைமைக் கொள்கையையே தமது அரசாங்கம் பின்பற்றுமென்றும் அரபு ஐக்கியம் அதன் நோக்கமென்றும் திரு. பச்சாச்சி கூறினர்.

# மன்னருடன் பயனுள்ள பேச்சு வார்த்தை

## திரு. சாஸ்திரி நம்பிக்கை

காட்மாண்டு, மார்ச். 5

இந்திய உள்விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று மூன்றுவது தடவையாக நேபாள மன்னர் மகேந்திரரைச் சந்தித்து சுமார் ஒரு மணி நேரம் பேசினர்.

இதன்பின் திரு. சாஸ்திரி நிருபர்கள் மத்தியில் பேசுகையில் மன்னருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பயனுள்ளவையாக இருந்ததென்றும் தாங்கள் விவாதித்த விஷயங்கள் பின்னர் தொடர்ந்து ஆலோசிக்கப்படுமென்றும் கூறினர்.

இந்திய-நேபாள உறவுபற்றி மட்டுமல்லாது இந்தியா, நேபாளம் சம்பந்தப்பட்ட சர்வதேச பிரச்னைகள்பற்றியும் தாங்கள் பேசியதாக திரு. சாஸ்திரி தெரிவித்தார்.

நேபாள-இந்திய நட்புறவுச் சங்கம் ஒழுங்கு செய்த ஒரு நிகழ்ச்சியில் திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று பேசுகையில் இந்தியாவுக்கும் நேபாளத்துக்குமிடையிலுள்ள எவ்விதக் கருத்து வேற்றுமைகளும் நீக்கப்படவேண்டுமேதவிர மிகைப்படுத்தப்படக் கூடாது என்றார். நல்லுறவைக் கெடுக்கும் எச்செயலும் நடைபெறக் கூடாதென்றும் நல்லுறவை வளர்க்கவேண்டுமென்றும் அவர் சொன்னர்.

இரு நாடுகளும் புரட்சிகரமான மாறுதல் அடைந்துவருகின்றனவென்றும் பசி, வறுமை, வேலையின்மை ஆகிய பிரச்னைகள் இரு நாடுகளுக்கும் ஒரேமாதிரியானவையென்றும் இரு நாடுகளுக்குமிடையில் வர்த்தக உறவு பலப்படுத்தப்படவேண்டுமென்றும் திரு. சாஸ்திரி கூறினர்.

சமாதானத்தை விரும்பும் நாடு இந்தியாவென்றும் நேபாளமும் இந்தியாவும் சமாதானத்துக்காகத் தொடர்ந்து முயற்சி செய்யவேண்டுமென்றும் கூறினர்.

நேபாளம் சுதந்திரமான முழு ஆட்சி அந்தஸ்துள்ள நாடு. எங்கள் ஆட்சியைப்போல் உங்கள் ஆட்சியும் பாதுகாக்கப்படவேண்டுமென விரும்புகிறோம் என்று திரு. சாஸ்திரி கூறினர். நேபாளத்துக்கு இந்தியா அளிக்கும் உதவிகளை இணைப்பாகச் செயலாற்ற மந்திரிகளின் இணைப்புக் கமிட்டி ஒன்றை அமைக்கலாமென திரு. சாஸ்திரி யோசனை கூறினர். அவர் இன்று புதுடில்லிக்குப் புறப்பட்டார்.

# ராதாகிருஷ்ணன் யு. எஸ். விஜயம்

புதுடில்லி, மார்ச். 4

ஜனாதிபதி கென்னடியின் அழைப்பிற்கிணங்க, இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் வருகிற கோடைகாலத்தில் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யவிருப்பதாக அறிவிக்கப்பட்டது. இந்த நல்லெண்ண விஜயத்திற்கான, திகதி இன்னும் குறிப்பிடப்படவில்லை.

# நேபாள மன்னர்-சாஸ்திரி சந்திப்பு

காட்மாண்டு, மார்ச். 4

இந்திய உள்விவகார மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி நேற்று முன்னேற்பாடு எதுவுமின்றி மன்னர் மகேந்திரரைச் சந்தித்துப் பேசினர். நேபாள வெளிவிவகார மந்திரி திரு. துல்சி கிரியையும் தேசிய விவகார மந்திரி விஸ்வநாத தாப்பாவையும் சந்தித்துப் பேசினர்.

மன்னருடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் திருப்திகரமாக இருந்தனவென்று திரு. சாஸ்திரி பின்னர் நிருபர்களிடம் கூறினர்.

காந்திஜி நினைவுப் பள்ளிக்கூடத்துக்கும் காட்மாண்டுவில் இருந்து 50 மைல் தூரத்தில் இந்தியாவின் உதவியுடன் அமைக்கப்படும் நீர் மின்சார நிலையத்துக்கும் திரு. சாஸ்திரி சென்று பார்வையிட்டார்.

# பாக்.-சீன கூட்டறிக்கை

பீக்கிங், மார்ச். 4

சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டபின் பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனாப். புட்டோ இன்று பீக்கிங்கிலிருந்து புறப்பட்டார்.

சீனத் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின் இன்று வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் இந்திய-சீன எல்லைப் பிரச்னை இரு நாடுகளும் நேரடிப் பேச்சுவார்த்தைகள் நடத்துவதன் மூலம் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ளப்படுமென நம்பிக்கை தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கூட்டறிக்கையில் பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி ஜனாப். புட்டோவும். சீன வெளிவ்வகார மந்திரி மார்ஷல் சென்-யீயும் கைச்சாத்திட்டுள்ளனர்.

பாகிஸ்தான்-சீன பொருளாதார வர்த்தக உறவு பற்றியும் கூட்டறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பிரிட்டனும், அமெரிக்காவும் விரும்புகின்றன. ஆனால் ரஷ்யா இதற்கு மாறு பிருக்கிறது.

# ஜெனிவாவில் முட்டுக்கட்டை

ஜெனிவா, மார்ச் 5

ஜெனிவா ஆயுதப்பரிகரண மகாநாட்டில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை 8 நடுநிலைமை நாடுகள், இந்தியப் பிரதிநிதி திரு. ஆர்தல்லால் தலைமையில் புதிய யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளன. பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறவேண்டுமென

# "தியாகம் செய்யத் தமிழர் தயாராயில்லை"

திருக்கோணமலை, செவ்வாய்

இலங்கைக்கு உதவிபுரிந்துவந்த அமெரிக்கா தனது உதவியை நிறுத்தியதனைத் தொடர்ந்து இலங்கையிலுள்ள மக்களைத் தியாகம் செய்யும்படி அரசாங்கம்கோரியிருப்பதனைத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இலங்கையின் இரண்டாந்தரப் பிரஜைகளாக மனிதாபிமானமற்ற முறையில் இலங்கைத் தமிழ்மக்களை நடத்திவரும் இந்த அரசாங்கத்திற்கு தியாகம் செய்ய நாம் தயாராக இல்லை என்பதனை அரசினருக்குத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்' என்னும் தீர்மானத்தை தமிழரசுக்கட்சியின் திருமலைக் கிளைச் செயற்குழு நிறைவேற்றியுள்ளது. செயற்குழுக் கூட்டம் திரு. இ. சோமசுந்தரம் [illegible] தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

கூட்டுறவுச் சங்கங்களிடம் தங்களது நெல்லைக் கொடுக்கும் விவசாயிகள் தங்கள் கூப்பன் புத்தகங்களை அரசாங்கத்திடம் ஒப்படைக்கும்படி கோரும் சட்டம் அநீதியானதாகும். இது ஏழை விவசாயிகளைப் பாதிக்கும் சட்டமாகும். அரசாங்கம் இச்சட்டத்தை உடனடியாகவாபஸ்பெறவேண்டும்.

மூதூர் முன்னாள் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. த. ஏகாம்பரம் அவர்களின் சிரார்த்த தினத்தை வெகு விமரிசையாக நடத்துவதெனவும் அன்று பிற்பகல் தமிழரசு உறுப்பினர்களை அழைத்து ஓர் பொதுக் கூட்டம் நடத்தவேண்டும்

# சிங்களத் தகுதிப் பரீட்சை 32,000 பேர் விண்ணப்பம்

கொழும்பு, செவ்வாய்

கல்வி இலாகாவின் பரீட்சைப் பகுதியினரால் நடத்தப்படும் சிங்களத் தகுதிப் பரீட்சைக்கு, நாடு முழுவதிலுமுள்ள அரசாங்க காரியாலயங்களைச் சேர்ந்த சுமார் 32 000 அரசாங்க ஊழியர்கள் மனுச் செய்துள்ளனர்.

சிங்களத் தகுதிப் பரீட்சை எழுத இவ்வளவு பெருந் தொகையானோர் மனுச் செய்திருப்பது இதுதான் முதல் தடவையாகும்.

இவர்களில் சுமார் இருபதினாயிரம் பேர் சென்ற சனிக்கிழமை நடைபெற்ற பரீட்சைக்குத் தோற்றினர்.

மிகுதிப் பேர் அடுத்த சனிக்கிழமை நடைபெறவிருக்கும் இரண்டாம், மூன்றும் 'கிரேட்' பரீட்சைக்குத் தோற்றுவரென எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்களத் தகுதிப் பரீட்சைக்கு மனுச் செய்திருப்பவர்களில் பெரும்பாலானோர் தமிழ் பேசுவோர் என்று பரீட்சைக் கமிஷனர் திரு. எஸ். ஈ. ஆர். பேரின்பநாயகம் தெரிவித்தார்.

# இடதுசாரிகள் மறுப்பு

நாம்பென், மார்ச். 5

புதிய அரசாங்கம் அமைக்கும்படி இடதுசாரி அரசியல் கட்சிகளுக்கு தாம் விடுத்த கோரிக்கையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்று கம்போடியத் தலைவர் இளவரசர் நொரடம் சிகானுக் நேற்றிரவு வானொலியில் நிகழ்த்திய ஒரு உரையில் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலை நடத்திய பின் அரசாங்கத் தலைமைப் பதவியிலிருந்து தாம் விலகிக் கொள்ளப்போவதாக இளவரசர் அறிவித்தார்.

# மத்தியபிரதேச பட்ஜெட்

புதுடில்லி, மார்ச் 4

இன்று சமர்ப்பிக்கப்பட்ட மத்தியபிரதேச 1963-64-ம் ஆண்டு பட்ஜெட்டின் படி ரூ. 1,92 லட்சம் புதிய வரிகள் விதிக்கப்படவிருக்கின்றன.

# 3 விமானங்கள் நொறுங்கின ஐவர் பலி

பாரிஸ மார்ச். 4

வடமேற்கு பிரான்சில் இன்று மூன்று பிரெஞ்சு வெடிகுண்டு விமானங்கள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டதின் விளைவாக 5 விமானிகள் கொல்லப்பட்டனர். 5 விமானிகள் காயமடைந்தனர். 3 விமானங்களும் நொறுங்கின.

# டிகோல் கொலை முயற்சி

## 6 பேருக்குத் தூக்கு

பாரிஸ், மார்ச். 5

பிரெஞ்சு ஜனாதிபதி டிகோலை சென்ற ஆகஸ்ட் மாதம் கொலைசெய்யச் சதிசெய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஆறுபேருக்கு நேற்று பாரிஸ் விசாரணை மன்றம் ஒன்று மரணதண்டனை விதித்துத் தீர்ப்பளித்தது. மற்றும் எட்டுப்பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

# ராஜன்பாபுவின் அஸ்தி

பாட்னா, மார்ச். 4

காலஞ்சென்ற முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திர பிரசாத்தின் அஸ்தி சகல புண்ணிய நதிகளிலும் கரைக்கும்பொருட்டு பலவிடங்களுக்கும் எடுத்துச்செல்லப்பட்டது. பாட்னா வீதிகளில் அவரது அஸ்தி எடுத்துச் செல்லப்பட்டபோது ஆயிரக்கணக்கானோர் கூடியிருந்தனர். பீகார் முதன் மந்திரியும் அஸ்திகளைத் தரிசித்தார்.

# 1962-63ல் கேரள பட்ஜட்

## 485 லட்சம் அதிக வருமானம்

திருவானந்தபுரம், மார்ச்.4

1962 - 63-ம் ஆண்டுக்கான கேரளபட்ஜட்டை முதன்மந்திரி திரு. சங்கர் தாக்கல் செய்தார். இதன்படி ரூ. 485 லட்சம் வருமானம் கிடைப்பதற்கான புதிய வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

ஜம்மு காஷ்மீருக்கான 1962-63 ம் ஆண்டு பட்ஜட்டில் ரூ 277 லட்சம் துண்டுவிழுந்திருக்கிறது. புதிய வரி மூலம் 1 கோடி திரட்டப்படும்.

# ரயில் விபத்தில் 48 பேர் காயம்

புதுடில்லி, மார்ச். 4

நேற்றிரவுஅலகபாத்ரயில்வே நிலையத்தில் நடந்த ரயில் விபத்தில் 48 பேர் காயமடைந்ததாக லோகசபையில் அறிவிக்கப்பட்டது.

புதுடில்லி, மார்ச். 4

இந்திய வெளிவிவகாரக் காரியதரிசி திரு. ஆர். கே. நேரு, மேற்காசிய, கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தபின் இன்று டில்லி திரும்பினர்.

மணி வாக்கு

நான் மனித இயல்பைச் சந்தேகிக்க மாட்டேன். பெருந்தன்மையும் நட்புறவும் உடைய எந்தக் காரியத்தை நாம் செய்தாலும் அது மனித இயல்பைப் பிரதிபலிக்கும்; பிரதிபலித்தாக வேண்டும்.

—காந்திஅடிகள்.

ஈழநாடு

EELANADU. National Tamil Daily Post Box 49. Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு மாசி மீ 22 உ (6-3-63)

## புதிய வருமான வரி மசோதா

அரசாங்கம் கொண்டு வந்துள்ள புதிய வருமானவரி மசோதா, மாதச் சம்பளம் வாங்கி, வாய்க்கும் கைக்குமாக வாழ்க்கைப் போராட்டம் நடத்துபவர்களை மேலும் கஷ்டத்துக்கு உள்ளாக்குவதாக இருக்கும். வருமானவரி செலுத்துவோர் சங்கத்தாரும், அரசாங்க குமாஸ்தாக்கள்சங்க காரியதரிசியும் இவ்விஷயம் பற்றி எடுத்து விளக்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே தேசிய அபிவிருத்திவரி என்று கூறி மாதம் ரூ. 300க்கு மேல் உழைப்பவர்களுக்கும் 4 சத வரிவிதித்தனர். அவர்களுக்கு எவ்வளவு பெரிய குடும்பம் இருந்து, கடன்பட்டுக் கஷ்டப்பட்டாலும்சரி இந்தவரியைச்செலுத்த வேண்டி இருந்தது. இப்போது அந்த வரியை ரத்துச் செய்து, அவர்களிடம் வருமானவரி மூலம் அதிகமான தொகை வசூலிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கின்றது. இது தலைவலி போய் திருகுவலி வந்தது போலாகும். அதிகமான வருமானமுள்ளவர்களிடமும் உழைக்காமல் உட்கார்ந்தபடியே வருமானம் பெறுகிறவர்களிடமும் அதிகவரி வசூலிப்பதாயின், அதில் ஆட்சேபமில்லை. ஆனால் குமாஸ்தாக்கள் சங்கக் காரியதரிசி கூறுவது போல், ஏற்கெனவே வாழ்க்கைச் செலவுகள் உயர்ந்துள்ள இச்சமயத்தில் கடன்பட்டு ஜீவனம் நடத்த வேண்டிய நிலைமையிலுள்ள குடும்பத்தாரிடமும், அதிகவரி வசூலிக்க முற்படுவது அவர்களைப் பெரும் இம்சைக்கு உட்படுத்துவதாகும்.

ஒவ்வொரு குழந்தைக்கும் வருமானத்தில் இதுவரை ரூ. 500 கழிவு அளித்துவந்திருக்கையில், இனி ரூ. 250தான் கழிவு கொடுக்கப்படுமாம். படிக்கும் குழந்தைகளுக்கு, அதிக செலவாகும். பிரிட்டனிலே இக்குழந்தைகளுக்காக பெற்றோரைவிட அதிக கழிவு அளிக்கப்படுவதுடன், குழந்தைகளின் போஷணைக்காக அரசாங்கம் உதவிப்பணமும் கொடுக்கின்றது. ஆனால் இலங்கையிலே ஒரு குழந்தைக்கு மாதமொன்றுக்கு ரூ. 20தான் பெற்றோர்கள் (தங்கள் வருமானத்தில்) செலவிட காருண்ய அரசாங்கம் அனுமதிக்குமாம்! வாழ்க்கைச் செலவுகள் அதிகரிக்கும்

இக்காலத்தில், பெரிய குடும்பஸ்தர்கள் இப்புதிய வரிகளைக் கட்டமுடியாமல் பெரிதும் தவிக்க நேரிடும். இதுபற்றிப் பார்லிமெண்ட்சபைநிதானமாக யோசித்து புதிய வருமானவரி விகிதங்கள் சிறப்பாக நடுத்தர எளிய குடும்பக்குழந்தைகளைப் பாதிக்காவண்ணம் தடுக்கக் கடமைப்பட்டுள்ளனர்.

## தேயிலை

தேயிலை ஏற்றுமதி வரியை இந்தியா ரத்து செய்துவிட்டதால், இலங்கையின் சாதாரண தேயிலையின் ஏற்றுமதி விலை திடீரெனக் குறைந்துவிட்டது கவலை அளிப்பதாகும். ராத்தலுக்கு சராசரி 15 சத விகிதம் சென்றவார விலையை விடக் குறைந்துள்ளதாம். இந்தியத் தேயிலை ஏற்றுமதி வரி மீண்டும் விதிக்கப்படாத வரை, இலங்கையின் சாதாரணத் தேயிலையின் விலை மேலும் குறையவும்கூடும்.

இலங்கையும் இந்தியாவும் தேயிலை உற்பத்திசெய்யும் நாடுகள். இவ்விரு ஆசிய நாடுகளிடையேயும் இதுபற்றி ஒத்துழைப்பு இல்லாமல், போட்டாபோட்டி ஏற்படுமாயின், இரண்டுக்கும் பெருநஷ்டம் ஏற்படக்கூடும்.

இந்தியாவுக்கு அதிகவருமானம் வேண்டியிருக்கும் இச்சமயத்தில் ஏற்றுமதித் தீர்வையை ரத்துசெய்யவேண்டி ஏற்பட்டதற்கு முக்கியகாரணம் இருக்கக்கூடும். உலகிலே தேயிலை மார்க்கெட்டில் போட்டிகள் அதிகரித்து வருவதால், அதைச் சமாளிக்க இந்த நடவடிக்கையை இந்தியா எடுத்திருக்கலாம்.

என்றாலும் இவ்விஷயமாக இவ்விரு அண்டைநாடுகளும், கூடியவரை கலந்துயோசித்து, இவ்விஷயங்களில் ஒத்துழைப்பதே இரண்டின் நன்மைக்கும் நல்லுறவுக்கும் வழிசெய்யும். இரு தேசப் பிரதிநிதிகளும்கூடி, இதுபற்றி ஒரு சமரச முடிவு செய்யமுற்படுவதே, பலவிதங்களிலும் விரும்பத்தக்கதாகும்.

# டில்லி-பீக்கிங் சமாதான யாத்திரையின் நோக்கம்

**டில்லியிலிருந்து பீக்கிங்கிற்கு சாந்திசேனையின் சமாதான யாத்திரை ஆரம்பமாகிவிட்டது. 15 அங்கத்தவர்களைக்கொண்ட இந்த சமாதான அணியில் இலங்கையைச்சேர்ந்த திரு. நவரத்தினமும் அழைக்கப்பட்டிருந்தார். அவருக்கு இலங்கை அரசாங்கம் அனுமதி மறுத்துவிட்டது. சமாதான யாத்திரை பற்றி உலக சாந்திசேனைத் தலைவர்களான ஏ. ஜே. மஸ்டே, ஜெயப்பிரகாஷ் நாராயண், மைக்கேல் ஸ்காட் ஆகியோரும் ஆச்சார்ய வினோபாஜியும் விடுத்துள்ள செய்திகள் இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளன.**

ஒரு "பைத்தியக்காரத்தனமான" திட்டம் உள்ளத்தில் உருவாயிற்று. இந்தியாவிலும் வெளிநாடுகளிலிருந்தும் சமாதானத் தொண்டர்கள் பதினைந்து பேர் கொண்ட ஒரு நட்புறவு யாத்திரை டில்லியிலிருந்து பீக்கிங்குக்குச் செல்லும். அவர்கள் சாதாரண மனிதர்கள் தாம்; தனி நபர்களிடமோ அரசாங்கத்திடமோ அதிகம் செல்வாக்குப் பெற்றவர்களல்ல. எனவே இத்தகைய மனிதர்கள் நடத்தும் சமாதான யாத்திரையால் என்ன பயனேற்படும் என்று சிலர் கேட்கலாம். கடலில் ஒரு சில புட்டிகள் தேனைவிட்டு அதன் உப்பு நீர் முழுவதையும் இனிப்பாக்கிவிடுகிறேன் என்ற முயற்சியைப்போல இதுவும் அசட்டுத்தனமான ஒரு முயற்சியாகத் தோன்றலாம்.

ஆனால், இதைப்போன்ற எந்த முயற்சியும் முதலில் ஒரு மிகச் சிறிய அளவில்தான் ஆரம்பமாக முடியும்; அதன் பலனும் உடனடியாகத் தெரிந்துவிடாது. சமாதான வேட்கையே இது. அஹிம்சா சக்தியின் மதகுகளைத்திறந்து விடுவதற்கான ஒரு விஞ்ஞான பூர்வ சோதனை; நாடுகளுக்கிடையே நட்புறவை ஏற்படுத்தும் உத்தி பற்றிய ஒரு பரிசோதனை. இத்தகை முயற்சிகள் இடையறாமல் நடைபெற வேண்டும்.

டெல்லி-பீக்கிங்நட்புறவுயாத்திரையொன்றை நடத்துமாறு உலக சாந்தி சேனையை இந்திய சாந்தி சேனை அழைத்துள்ளது. உலக சாந்தி சேனை இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு, இத்திட்டத்தை செயல் படுத்தவும் முன்வந்துள்ளது.

இந்த முயற்சிக்கு உடனடியான காரணம், இந்தியாவுக்கும் சீனவுக்கும் ஏற்பட்டிருக்கும் எல்லைத் தகராறுதான் என்பதில் சந்தேகமில்லை. இத்தகராறை சமாதான வழிகளிலேயே தீர்துக்கொள்ள வேண்டும் என்று நம்மிடையே உள்ள தீவிர ஆர்வத்தின் அடையாளமேஇந்தயாத்திரை.

இருந்த போதிலும், நீண்டதொரு லட்சியத்தையும் இது அடிப்படையாகக் கொண்டுள்ளது. சீன மக்களுக்கும் இந்திய மக்களுக்குமிடையே செய்தித் தொடர்பு ஏற்படவேண்டுமென்ற ஆர்வத்தை வெளிப்படுத்துவதுடன், யாத்திரை வழியிலுள்ள கிராமங்களிலும் நகரங்களிலும் மக்களிடையே யுத்தம், சமாதானம் ஆகியவற்றின் பிரச்னைகளைப் பற்றி விவாதிப்பதும் இதன் நோக்கம் இதை நடத்துவதும், இதில் பங்கெடுத்துக்கொள்ளும் நபர்களும் சர்வதேச அளவில் இருப்பார்கள்; ஏனெனில் பிறநாடுகளிலுள்ள சமாதான வாதிகளும் இதில் பங்கெடுத்துக்கொள்ள விரும்புகிறார்கள்.

அஹிம்சையைக் கடைப்பிடிக்கும் ஸ்தாபனங்களால் இந்த யாத்திரை நடத்தப்படுகிறது. யாத்திரையில் பங்கெடுத்துக் கொள்பவர்களும், யாத்திரைக்கான ஒழுக்கம் என்ற முறையில் மட்டுமல்ல, அஹிம்சையே வாழ்க்கை வழி ஆக்க பூர்வமான சமுதாய மாற்றத்துக்கும் தகராறுகளைத் தீர்ப்பதற்கும் அடிப்படையானதொரு முறை என ஏற்றுக்கொண்டிருப்பவர்கள் ஆயுதங்களினாலோ யுத்தங்களினாலோ யாருக்கும் நன்மை ஏற்படுவதில்லை; எந்தப் பிரச்னையும் அத்தகைய வழிகளால், அதுவும் அணுசக்தி யுகத்தில் தீர்க்கப்படமுடியாது என்பதில் நாங்கள் நம்பிக்கை கொண்டவர்கள். யுத்தமும் யுத்தத்திற்கான தயாரிப்புகளும் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமல்லாமல் மனித இனம் முழுவதுக்குமே தீங்குவிளைவிக்கும்; ஏனெனில் விஞ்ஞானமும் நவீன விளைவுகளும் மனித குலத்தை அந்த வளவுக்கு நெருக்கத்துக்குக் கொண்டு வந்துவிட்டது.

யுத்தம், யுத்தத்துக்கான தயாரிப்புகள் ஆகியவற்றைப் பற்றி எங்களுக்குள்ள கவலையை எடுத்துரைப்பது, அன்பு விஷயத்தை விளக்கிக்கூறுதல் பரஸ்பரம் உணர்ந்துகொள்ளல் ஆகியவற்றின் அடிப்படையிலேயே அமைந்தது. அனைவரின் ஒருமித்த நன்மைக்காகப் பாடுபடுவதே என்றென்றும் எங்கள் லட்சியம். யாரையும் குற்றங் கூறுவதோ புண்படச் செய்வதோ, தாழ்த்திக் கூறுவதோ எங்களது நோக்கமே அல்ல. மனப்பான்மையில் மாறுதல் ஏற்படுவது ஒன்றைத்தான் நாங்கள் விரும்புகிறோம். அன்பு ஒன்றுதான்! இப்பணியை தன்மையுடன் செய்யும் ஆற்றல்வாய்ந்தது.

# "சீர்கேடுகளுக்கு நாட்டின் கல்வி முறையே காரணம்"

## பௌத்தபிக்கு கூறுகிறார்

கண்டி, செவ்வாய்

"சட்டவிரோத மதுபானத் தயாரிப்பு, சூதாட்டம், திருட்டு, தற்கொலை முதலிய சட்டவிரோதமான செயல்களும் ஒழுங்கீனமும் எமது நாட்டில் நிலவுவதற்கு நாட்டின் இன்றைய கல்வி முறைதான் காரணம். பிள்ளைகளின் தகுதிபற்றிக் கவனிக்காமல் பாடசாலைகளில் அவர்கள் வகுப்பேற்றப்படுகிறார்கள். சிரேஷ்ட வகுப்பில் சித்தியடையத் தவறியதும் வெளியில் விடப்படுகிறார்கள். என்ன செய்வதென்று தெரியாத அவர்கள் இத்தீயவழிகளை நாடுகிறார்கள்" என்று பண்டித அமுனுகம ராஜகுரு விபாசி அனுநாயக்க தேரோ இங்கு ஒரு வைபவத்தில் பேசுகையில் கூறினர்.

"முதலில் இந்தியர், பின்னர் பறங்கியர், அதன்பின் ஆங்கிலேயர் ஆகிய அந்நியரின் ஆதிக்கத்தில் பொருளாதாரம், சமயம், கலாசாரம் ஆகியவற்றில் பல்லாண்டுகள் கஷ்டமடைந்தபின் 1947-ம் ஆண்டில் நமது நாடு விடுதலையடைந்தது. ஆனால் இந்தச் சுதந்திரம் எங்களுக்கு என்னத்தைக் கொண்டுவந்தது? ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்திலிருந்ததைவிட இப்பொழுது எல்லாம் விலையேறிவிட்டன. சாதாரண மனிதன் வாங்கும் ஒரு யார் சாதாரணத் துணியின் விலை அதிகரித்துவிட்டது. பிள்ளைகளின் புத்தகங்கள் விலையேறிவிட்டன. உணவுப் பொருள்களும் விலை அதிகம். கல்வி வசதி மேலும் கஷ்டமாகிவருகிறது. கல்வியின் தரம் முன்னெப்போதுமில்லாதவாறு மோசமாகிவிட்டது" என்றும் அவர் கூறினர்.

## ஐயாறன் எழுதுவது

பெட்ரோல் ஓர் எரிபொருள். குபீரென்று பற்றி எரியக்கூடிய ஆபத்தானது. இப்போது இதுபற்றி இலங்கையில் பெரிய தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால், அமெரிக்கா, பிரிட்டன் முதலிய நாடுகளுக்கும் இலங்கைக்கும் உள்ள நல்லுறவுகளுக்கும் ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று கவலைப்படத்தக்கபடி நிலைமை நெருக்கடியாகி வருவதைப் பார்க்கிறோம்.

* * *

பல வருடங்களாக மூன்று பெட்ரோல் கம்பெனிகளும் இங்கு பெட்ரோல் எண்ணெய் வியாபாரம் நடத்திவருகின்றன. இவற்றினிடையே சிற்சில சமயம் போட்டா போட்டி ஏற்பட்டாலும், முடிவில் இவற்றுக்குள்ளாக ஓர் சமரசம் ஏற்பட்டு, "பொதுவான சர்வதேச விலை" நிர்ணயித்து வியாபாரம் செய்துவருகின்றன.

அந்த விலையைவிட மிகக் குறைவான விலைக்கு ரஷ்யா பெட்ரோல் சப்ளை செய்ய முன்வரவே, நிலைமையில் புது மாறுதல் ஏற்பட்டது. இலங்கை பெட்ரோல் கார்ப்பரேஷனை இலங்கை அரசாங்கம் ஆரம்பித்து, ரஷ்யாவிடம் குறைந்த விலைக்கு பெட்ரோல் வாங்குகின்றது. இந்த விலையைவிட 5 சத விகிதத்துக்கு மேல் பெட்ரோலை இங்கு இறக்குமதி செய்யக்கூடாதென்று அரசாங்கம் ஆகக்கூடுதல் விலையை நிர்ணயித்து, கெஜட்டில் அறிவித்தல் செய்துவிட்டதால், இனி இங்கு பெட்ரோல் வியாபாரம் நடத்துவதா, அல்லது நிறுத்துவதா என்பது பற்றி மூன்று அந்நிய பெட்ரோல் கம்பெனிகளும் இப்போது சஞ்சலமடைந்துள்ளன.

* * *

அந்நிய செலாவணியை இலங்கை மிச்சப்படுத்தவேண்டிய அவசியமிருப்பதாயும், ரஷ்யா கொடுக்கும் விலைக்கே இலங்கை தேவையான பெட்ரோல் வாங்குவதாயின், இந்நாட்டுக்கு மொத்தம் 2 கோடி 99 லட்சம் ரூபாய் செலாவணி மிச்சம் ஏற்படுமென்றும் இலங்கை வர்த்தக அமைச்சு கூறுகிறது.

தனிப்பட்ட கம்பெனிகளை நசுக்காத முறையில் இந்தச் செலாவணியை மிச்சப்படுத்துவதற்கு வழி உண்டா என்று மூன்று எண்ணெய்க் கம்பெனிகளும் பிரதமமந்திரியைக் கேட்டுள்ளன. இது எப்படியாயினும் அமெரிக்க-பிரிட்டன்-இலங்கை நல்லுறவுகள் முறியப்படாது. அதற்கான முறையில் காரியங்கள் விவேகத்துடன் செய்யப்படுமென்றே நம்புவோம்.

* * *

அவசியமானால் இலங்கைக்கு இந்தியா பெட்ரோல் சப்ளை செய்யுமா? என்று ஓரன்பர் கேட்கின்றார். இந்தியாவிலே ஒன்றரை லட்சம் டன் பெட்ரோல் உற்பத்தியாகிறதாம். இது ஏற்றுமதி செய்யக் காணுதென்று புதுடில்லி செய்தியொன்று தெரிவிக்கின்றது.

இந்தியாவிலும் இந்த மூன்று எண்ணெய்க் கம்பெனிகளுமுள்ளன. அவை "குறிப்பிட்டசர்வ தேசவிலை"யை இநதியஅரசாங்கம் அங்கீகரித்துவிட்டதாயும், அந்தவிலை ரஷ்ய விலைக்கு மிக அதிகமாக இருப்பதைக் கண்டதும் இந்தியா அந்த ஒப்பந்தம்பற்றி மிக வருந்துவதாயும் அதே செய்தி தெரிவிக்கின்றது.

இதைக் கவனிக்கையில், இவ்விஷயத்திலே இந்தியாவைவிட இலங்கை அதிக கெட்டித்தனமாக நடந்து கொண்டுள்ளதாகவே தோன்றுகிறதல்லவா!

* * *

கள்ளத்தோணிகளென்ற சந்தேகத்திலே தலைமன்னாரிலுள்ள முகாம் சிறையில் வை...

(5-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி அசைஸ் விசாரணை

# 'தடியால் அடித்ததும் கீழே விழுந்தார்'

## கச்சாய் கொலைவழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நேற்று சாவகச்சேரி கச்சாய் ரேட்டு கொலைவழக்கு நீதியரசர் திரு. ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

1962-ம் ஆண்டு மாசி மாதம் 8-ம் திகதி சாவகச்சேரிப் பகுதியைச் சேர்ந்த கச்சாய் ரேட்டில், கணபதிப்பிள்ளை கந்தையா, வைத்திலிங்கம் கனகரத்தினம், கதிரவேலு பொன்னையா ஆகியோர், கணபதி பொன்னு என்பவரைக் கொலை செய்ததாகவும், அதே இடத்தில், அதே நேரத்தில் கணபதி நாகமுத்துவை கூரிய ஆயுதமாகிய கத்தியால் படுகாயமுண்டுபண்ணியதாகவும், அதேயிடத்தில் அதே நேரத்தில் கணபதி சின்னையா என்பவரைக் கூரிய ஆயுதமாகிய கத்தியினால் காயப்படுத்தியதாகவும், குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள் மூவரும், அவர்கள்மீது சுமத்தப்பட்ட மூன்று குற்றச்சாட்டுகளுக்கும், தாங்கள் சுற்றவாளியென்று தனித்தனியே பதிலளித்தார்கள்.

முதலாம் எதிரி சார்பில் திரு. செருபிம், திரு. டி. கணேசலிங்கத்தின் உதவியுடனும், திரு. செல்வரத்தினத்தின் அனுசரணையுடனும் ஆஜரானார். இரண்டாம், மூன்றும் எதிரிகளின் சார்பில் திரு. கணேசலிங்கம், திரு. செல்லத்துரையின் அனுசரணையுடன் ஆஜரானார். அரசாங்கத்தின் சார்பில் திரு. ஆனந்தகுமாரசாமி எதிரிகளுக்காக நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் திரு. வேச்லி போல் ஆஜரானார்.

சாவகச்சேரி டாக்டர் திரு. அருளம்பலம் சாட்சியமளித்தபோது, 1962-ம் ஆண்டு மாசி மாதம் 9-ம் தேதி கணபதி பொன்னுவின் சடலத்தைப் பிரேத பரிசோதனை நடத்தியதாகவும், இறந்தவரின் வலது பக்க நெற்றியிலும், பின்பக்க தலையிலும், நடு நெற்றியிலும் மூன்று வெளிக் காயங்கள் காணப்பட்டதாகவும், அக்காயங்கள் பொல்லினால் அடித்ததால் ஏற்பட்டிருக்குமென்றும் கூறினார். முதல் காயத்திற்கும், இரண்டாவது காயத்திற்கும் 7 அங்குல இடைவெளியுள்ளதென்றும், உள் காயங்கள் காணப்பட்டதாகவும் தெரிவித்தார்.

காயமடைந்த கணபதி சின்னையாவை 8-2-62-ல் மத்தியானம் 12-30 மணிக்கு பரிசோதித்ததாகவும், முதுகிலும், இடது கை மணிக்கட்டிலும் உள்ள காயங்கள் கூரிய கத்தியினால் ஏற்பட்டிருக்குமென்றும், இடது கையில் முழங்கைக்குக் கீழே உள்ள காயம், பொல்லால் ஏற்பட்டிருக்குமென்றும் கூறினார்.

காயமடைந்த கணபதி நாகமுத்துவை 8-2-62-ல் மத்தியானம் 12-20 மணிக்கு பரிசோதனை நடத்தியதாகவும், தலையில் காயங்கள் காணப்பட்டதாகவும் கூறினார்.

டாக்டர் அருளம்பலத்தை எதிரிகளின் வழக்கறிஞர்கள் திரு. செருபிமும், திரு. டி. கணேசலிங்கமும் குறுக்கு விசாரணை செய்தார்கள்.

யாழ்ப்பாணம் சட்ட வைத்தியர் திரு. வைத்திலிங்கமும் சாட்சியமளித்தார்.

சம்பவத்தை நேரில்கண்டதாக்கூறும் சின்னத்தம்பி சாட்சியத்தின்போது கூறியதாவது:-

இறந்தவர் பொன்னு எனது ஒன்றுவிட்ட சகோதரன். நாகமுத்துவையும் தெரியும். அவரை செல்லன் என்றும் கூப்பிடுவது வழக்கம். 1962-ம் ஆண்டு மாசிமாதம் 8-ம் திகதி காலை சாவகச்சேரி கோர்ட்டிற்கு வழக்குப்பார்க்கவந்தோம். அன்று 1-ம், 2-ம் எதிரிகளுக்கு எதிராக காலஞ்சென்ற பொன்னு வழக்கு தொடர்ந்திருந்தார். அந்த வழக்கு சமாதானமாக்கப்பட்டது. வழக்கு முடிந்ததும், நானும் பொன்னுவும் சந்தைக்குப் போய்விட்டு கச்சாய் ரேட்டு வழியாக வீட்டிற்குச் சென்றோம். சின்னையாவும் நாகமுத்துவும் வள்ளியும் எங்களைப் பின்தொடர்ந்தார்கள். வழியில் வல்லி கந்தையாவின் கள்ளுக்கடை இருக்கிறது. நாங்கள் போகும்போது பின்னால் ஒரு மாட்டு வண்டில் வந்தது. நாங்கள் அதற்கு வழிவிட்டோம். வண்டியிலிருந்த கனகரத்தினம் பின்னால் சயிக்கிளில் வந்த சின்னத்தம்பியிடம் பொன்னுவை அடிக்கும்படி சொன்னார். உடனே சின்னத்தம்பி பொன்னுவிற்கு கையால் அடித்தார். அதன்பின் வண்டிலுக்குள்ளிருந்து எடுத்த பொல்லினால் பொன்னுவை அடித்தார். பொன்னுவின் தலையின் பின்பக்கத்தில் அடுத்தடுத்து அடித்தார். பொன்னு விழுந்து போனார். மற்றவர்கள் பொன்னுவிற்கு அடிக்கவில்லை. அதன்பின் பொன்னையா, சின்னையாவைக் குத்தினார். கனகரத்தினம் நாகமுத்துவைக் குத்தினார். நாங்கள்பயந்து குளறினோம். வண்டியில் வந்த பலரும் அடித்தார்கள். வேலியிலிருந்து பிடுங்கிய தடிகளால் அடித்தார்கள். சின்னையாவுக்குப் பொல்லால் யார் அடித்தது என்று எனக்குத் தெரியாது. நாகமுத்துவுக்குத் தடியால் கனகரத்தினம் அடித்தார்கள். சந்தையிலிருந்து வண்டியிலிருந்து வந்த ஆட்களும் சேர்ந்து அடித்தார்கள். அதன் பின் அடித்தவர்கள் கிழக்குப்பக்கமாக வண்டியிலும், நடந்தும் பாலாவிக்கு சென்றார்கள். முதலாம் எதிரி சயிக்கிளில் சாவகச்சேரிக்குப் போனார். நான் காயமடைந்தவர்களுடன் சாவகச்சேரி ஆஸ்பத்திரிக்குப் போய் பின்பு பொலிஸ் நிலையத்திற்குச் சென்று வாக்குமூலம் அளித்தேன்.

சின்னனை எதிரிகளின் வழக்கறிஞர் திரு. செருபிம் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: கீழ் கோர்ட்டில் 1-ம் எதிரி சயிக்கிளால் இறங்கி பின்னுக்கு வந்தவரிடம் சயிக்கிளை கொடுத்தார் என்று சொன்னீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

வழ: முதலாம் எதிரி வண்டிக்குள்ளிருந்து ஒரு தடி எடுத்தார் என்று இன்று சொன்னீரா?

சாட்சி: இல்லை, நான் சொல்லவில்லை.

வழ: இன்று கோர்ட்டில் கூறினீர். 1-ம் எதிரி வண்டிக்குள்ளிருந்து தடி எடுத்ததாக.

சாட்சி: 2-ம் எதிரி கனகரத்தினம் எடுத்ததாகச் சொன்னேன்.

வழக்: கனகரத்தினம் எடுத்து யாரை அடித்தார்.

சாட்சி: சின்னையா நாகமுத்துவை.

வழக்: இறந்தவரை அடிக்கவில்லையா?

சாட்சி: இல்லை.

வழ:- கனகரத்தினம் வேலியில் கதியால் பிடுங்கினர் என்று கீழ் கோர்ட்டில் சொன்னீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

வழ: கீழ் கோர்ட்டில் பொன்னுவிற்கு கனகரத்தினம் தலையில் அடித்ததாகச் சொன்னீரா?

சாட்சி: இல்லை.

நீதியரசர்: இப்ப நீர் சொல்வது 2-ம் எதிரி கனகரத்தினம் பொன்னுவிற்கு அடிக்கவில்லையென்பதா?

சாட்சி: ஆம்.

வழ: கீழ் கோர்ட்டில் 2-ம் எதிரி வண்டியில் எடுத்த தடியால் பொன்னுவை அடித்தார் என்றீரா?

சாட்சி: இல்லை.

வழ: அப்பொழுது பொன்னு கீழே விழுந்தார் என்றீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

வழ: இன்று கோர்ட்டில் 1-ம் எதிரி பொன்னுவிற்கு அடித்தார் என்றீரா?

சாட்சி: ஆம்.

வழ: பொன்னுவுக்கு முதலாம் எதிரி மட்டும் தான் அடித்தார்?

சாட்சி: ஆம்.

வழ: கீழ்கோர்ட்டில் 2-ம் எதிரி, கீழே விழுந்தபின் பொன்னுவிற்கு அடித்ததாகக் கூறினீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

வழ: கீழ்கோர்ட்டில், பொன்னு ஓடியபொழுது 2-ம் எதிரி துரத்தி பொல்லால் அடித்தார் என்றீரா?

சாட்சி: இல்லை.

வழ. பொன்னு தலையில் ஒரு அடிவிழுந்ததும் கீழே விழுந்தார் என்று கீழ் கோர்ட்டில் சொன்னீரா?

சாட்சி: ஆம்.

வழ: 2-ம் எதிரி கனகரத்தினம் வண்டியால் பொல் எடுத்தாரா?

சாட்சி: ஆம்.

வழ: பொன்னுவிற்கு அடித்த பின்பா குத்துவிழுந்தது.

சாட்சி: ஆம்

வழ: கீழ் கோர்ட்டில் 1-ம், 2-ம், எதிரி தொடர்ந்து மற்றவர்களை குத்திய பின்பும், பொன்னுவை அடித்தார்கள் என்றீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

வழ: கீழ் கோர்ட்டில் 1-ம், எதிரி3-ம்எதிரிக்குகறுத்தப்பிடியுள்ள கத்தி கொடுத்ததாகக் கூறினீரா?

சாட்சி: ஞாபகமில்லை.

வழ: நாகமுத்து 2-ம் எதிரி கனகரத்தினத்திற்கு அடித்ததாக சொன்னார்.

சாட்சி: ஆம்.

வழ: கீழ்க் கோர்ட்டில் நாகமுத்து 2-ம் எதிரியை அடித்ததாக அறிந்தேன் யார் சொன்னது என்று தெரியாது என்றீரா?

சாட்சி: இல்லை.

வழ: அப்படி ஒரு சத்தம் பிறந்தது.

சாட்சி: இல்லை.

வழ: நாகமுத்துவை நீர் கேட்டதும். எனக்குத் தெரியாது என்று சொன்னதாக கீழ்க் கோர்ட்டில் சொன்னீரா?

சாட்சி: ஞாபகமில்லை நாகமுத்துதான் சொன்னார்.

சாட்சியை வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் குறுக்கு விசாரணை செய்தபோது சம்பவம் நடந்த இடத்தில் உள்ள வேலியில் நாவல் தடியும், கிளுவந்தடியும் இருந்தது என்றார்.

காலஞ்சென்றவரின் சகோதரரும் சம்பவத்தின்போது காயப்பட்டவருமாகிய கணபதி நாகமுத்து சாட்சியமளித்தார்.

மேல்விசாரணை இன்று காலை வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

---

## "நகரசபையை காப்பாற்றுங்கள்"

திருக்கோணமலை, செவ்வாய்

'1957,58-ம் ஆண்டுகளில்வரியிறுப்பாளர்கள் செலுத்தாத வரிப்பணத்தை மூன்று தவணைக்குள் செலுத்தி நகரசபையை கமிஷனர் கையில் ஒப்படைக்கப்படுவதிலிருந்து காப்பாற்ற வேண்டும்' என்று திருமலை நகராண்மைக்கழகத் தலைவர் டாக்டர் சி. சிவானந்தம் வரியிறுப்பாளர் சங்கக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார். திருமலைச் சிவன்கோவில் வீதியில் திருமலை எம். பி. திரு. என். ஆர். ராஜவரோதயம் தலைமையில் நடைபெற்றது. பலர் இக் கூட்டத்தில் உரை நிகழ்த்தினர்.

---

## பெற்றோர் சங்க உபகுழுக்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தில் கடந்த வாரம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பெற்ற பெற்றோர் சங்கத்தின் முதலாவது செயற்குழுக் கூட்டம் திரு. மா. கனகசபை தலைமையில் நடைபெற்றது. சங்கத்தின் அமைப்பு வேலைத் திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டன. பிரசாரம், கல்வி, கலாசாரம், விவசாயம் கைத்தொழில் போன்ற விஷயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க நான்கு உபகுழுக்கள் தெரிவு செய்யப்பட்டன.

பிரசாரம்: திருவாளர்கள் சி. பொன்னையா, பொ. சுப்பையா, மு. மகாலிங்கம், க. முருகையா, வி. வேலாயுதம், திருமதி மா. மங்கம்மா.

கல்வி கலாசாரம்: திருவாளர்கள் சி. செல்வநாயகம், க. பத்மநாதன், சோ. கனகசபை.

விவசாயம்: திருவாளர்கள் வ. இளையதம்பி, செ. செல்வத்தம்பு, கா. சி. நடராசா.

கைத்தொழில்: திருவாளர்கள் மா. கனகசபை, சி. தம்பு, ஆர். நடராசா, சி. பொன்னையா.

---

## டெலிபோன் வசதியில்லை!

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள ஸ்தலஸ்தாபன அலுவலகத்தில் டெலிபோன் வசதியில்லாமல் அதிகாரிகள் பெரிதும் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது. இந்த அலுவலகம் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தில் இன்னும் பழைய டெலிபோன் இணைக்கப்படவில்லை. இதனால் ஸ்தலஸ்தாபன அதிகாரிகளும் ஸ்தலஸ்தாபன சபைகளும பெருங் கஷ்டமடைந்துவருவதாகவும் இதனை நீக்குவதற்கு மேலதிகாரிகள் இன்னும் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் அறியப்படுகிறது.

---

## ஐயாறன்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்டவர்களுக்கு மிகமோசமான உணவு அளிக்கப்படுவதாயும் இதனால் ஒருவருக்கு வயிற்றுக் கோளாறு ஏற்பட்டு பலியானதாகவும் ஒரு செய்தி கூறுகிறது. இது பெரிய பாவம். இவ்வித புகார் முன்னரும் கிளம்பியது. மனிதாபிமானத்தை முன்னிட்டாயினும் சிறைக் கைதிகளுக்குக் கொடுக்கும் உணவையாவது இவர்களுக்குக் கொடுக்க வேண்டாமா? இதைப் பற்றி பார்லிமெண்டில் எடுத்துக்கூறி, அவர்களுக்கு நீதிவழங்க யாரும் முன்வருவார்களா?

* * *

தாயத்தார்தமர்
நல்நிதியென்னுமிம்
மாயத்தே கிடந்திட்டு
மயங்கிடேல்
காயத்தே யுளன்
கானூர் முளையினை
வாயத்தால வணங்கீர்
வினைமாயவே.

—திருநாவுக்கரசர்.

---

## எதிரி விடுதலை

மாவிட்டபுரம், செவ்வாய்

சங்கானை மேற்கு பனிப்புலத்தைச் சேர்ந்த அருணாசலம் சிவப்பிரகாசம் என்பவர் அதே ஊரைச் சேர்ந்த செல்வி மார்க்கண்டு தனலட்சுமி என்னும் யுவதியை தகாதநோக்கத்துடன் கையிற்பிடித்து இழுத்ததாகச் சங்கானைப் பொலிசாரால் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. வெஸ்லி. டி. தாமோதரம் முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது.

செல்வி தனலட்சுமி சாட்சியமளித்துக் கொண்டிருக்கையில் விசாரணையை நீதிபதி இடையில் நிறுத்தி எதிரியைவிடுதலை செய்து திர்ப்பளித்தார். அவர் தமது தீர்ப்பில் சாட்சியிடம் கூறியதாவது:

இனிமேல் நீர் கோவிலுக்குப் போவதாயின் தனியே செல்ல வேண்டாம். இவ்வாறான இளம்பெண்கள் நல்ல ஒருவரைத் துணைக்கு அழைத்துச் செல்லவேண்டும். அவ்வாறு நீர் அழைத்துச் சென்றிருப்பீராயின் உமது கையைப் பிடித்திழுத்தவரின் கன்னத்தில் அவர் அறைந்திருப்பார். இல்லையேல் பொலிசாரிடம் உடனடியாக இதனைத் தெரிவித்திருப்பார். இச்சம்பவத்தில் எதிரி உனது கையைப் பிடித்திருக்கலாம். இத்தகைய சம்பவம் பாரதூரமானது. இது உடனடியாகப் பொலிசாரிடம் தெரிவிக்கப்படவேண்டியது. நீரோ, உமது தந்தையோ பொலிசாரிடம் இதனைத் தெரிவிக்காமல் 14 மணித்தியாலங்கள் கடந்தபின்னரே இச்சம்பவத்தைத் தெரிவித்திருக்கிறீர்கள். இதிலிருந்து எதிரி சார்பில் வாதாடிய வழக்கறிஞர்கள் கூறியபடி இது தயாரிக்கப்பட்ட ஒருவழக்கு என்றே ஊகிக்கின்றேன். எனவே எதிரியை விடுதலை செய்கிறேன்.

எதிரிசார்பில் திரு. டி. கணேசலிங்கம் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் அனுசரணையுடன் ஆஜரானார். திரு. என். டபிள்யு. ஏகநாயகா வழக்கை நடத்தினார்.

---

## 'காரியாலயத்தை மாற்றவேண்டாம்'

### கி. ச. கோரிக்கை

திருக்கோணமலை, செவ்வாய்

மூதூரிலுள்ள காரியாதிகாரி கந்தோரின் நிர்வாகத்துள் தம்பலகமம் காரியாதிகாரி கந்தோரை இணைக்க முடிவுசெய்திருப்பது உண்மையானால் தம்பலகமம் மக்கள் வீணை பொருட் செலவும் பிரயாணத்தினால் பலவித கஷ்டங்களையும் அனுபவிக்க நேரிடும். ஏழைகளால் தம்பலகமத்திலிருந்து பஸ் செலவு செய்து திருக்கோணமலைக்குச் சென்று அங்கிருந்து கிண்ணியாக் குடாக்கடலை படகு மூலம் கடந்து மூதூருக்குச் சென்றுதன் அலுவலை முடித்துக்கொண்டு திரும்புவது இலகுவான காரிய மல்ல.

இவ்வாறு மூதூர்க் காரியாதிகாரி காரியாலயத்துடன் தம்பலகமத்திலுள்ளகாரியாதிகாரி காரியாலயத்தை இணைக்கும் யோசனையைக் கைவிடும்படி அரசாங்கத்தைக்கோரும் பிரேரணையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் திரு. கோணமலை குறிப்பிட்டார். தம்பலகமம் கிராம சபைக் கூட்டத்தில் மேற்படி தீர்மானம்நிறைவேறியது. கூட்டம்அக்கிராசனர் திரு. சு வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

---

## கி. ச. அனுதாபம்

யாழ்ப்பாணம், புதன்

கொக்குவில் சன சமூக நிலையம் காலஞ்சென்ற இந்திய முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்க இரு நிமிடம் மௌனம் அனுஷ்டித்தது. இக்கூட்டத்திற்கு திரு. க. க. இராசா தலைமைவகித்தார்.



# மங்கையர் உலகம்

# ஓர் அமெரிக்க தொழிலாளியின் குடும்ப வாழ்க்கை

கெல்லி என்பவர் வாஷிங்டன் மாநிலத்திலுள்ள ஒரு விமானக் கம்பெனியில் மதிப்புள்ள மெக்கானிக். ஒரு மணி நேரவேலைக்கு அவர் 3.07 டாலர் சம்பளம் பெறுகிறார். இரண்டு வாரச் சம்பளமாக அவர் 245.60 டாலர் பெறுகிறார். அதில் பிடிக்கப்படுவது போக அவருக்கு ஏறக்குறைய 193 டாலர் கிடைக்கும். அந்த வருவாயைக் கொண்டு அவரது மனைவி அடுத்த இரண்டு வாரத்துக்கு வீட்டை நடத்த வேண்டும்.

பாங்கியில் செக்கை மாற்றியதும் அவரது மனைவி பெட்டி கெல்லி பணத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்துச் செலவு செய்கிறார். உணவுக்காகவும் மற்ற வீட்டுச் செலவுகளுக்காகவும் சுமார் 100 டாலர் எடுத்து வைக்கிறார். அதிலிருந்துதான் வாரத்துக்கு 5 டாலர் கெல்லிக்கு கைச்செலவுக்குக் கொடுக்கிறார். குடும்பச்செலவு வகைகளுக்குக் கொடுக்க வேண்டிய பாக்கிகளைக் கொடுக்க ஒருபகுதி பயன்படுகிறது. இவையெல்லாம் போக 5 டாலர் முதல் 40 டாலர்வரை மீதி இருக்கும். அது சேமிப்புக் கணக்குக்குச் செல்கிறது. குடும்ப அவசரச் செலவுகளுக்கும் பிள்ளைகள் படிப்புக்கும் அது பயன்படும்.

பெட்டி கெல்லி தாம் இருக்கும் இடத்துக்கு அருகேயுள்ள பெரிய கடைக்குச் சென்று தேவையான பொருள்களுக்காகச் சுமார் 30 டாலர்செலவு செய்கிறார். கண்டவற்றையெல்லாம் வாங்குவதில்லை. தமக்குத் விருப்பமானவற்றையெல்லாம் வாங்க வேண்டுமென்றும் அவர் நினைப்பதில்லை. தேவையானவற்றை மட்டும் வாங்குகிறார். மேஜோடுகள் போன்ற சிறு பொருள்களையும் அவர் வாங்குவதுண்டு.

15 ஆண்டுகளாக பெட்டியும் கெல்லியும் தங்களுக்கு வேண்டிய பொருள்களை ஒவ்வொன்றாக வாங்கிச் சேர்த்திருக்கிறார்கள். நல்ல வீடு ஒன்றை அவர்கள் வாங்கியிருக்கிறார்கள். வீட்டுக்கு வேண்டிய நல்ல சாமான்கள் வாங்கிப் போட்டிருக்கிறார்கள். இவற்றையெல்லாம்விட அவர்கள் குடும்ப வாழ்க்கையில் அமைதியும் அன்பும் நிலவுகின்றன.

அவர்களுடைய வீட்டில் நான்கு படுக்கை அறைகள் உள்ளன. ஆப்பிள் பழத் தோட்டமும் பெரிய செடிகளும் வீட்டையொட்டி இருக்கின்றன. ரோஜாச் செடிகளும் மற்றப் பூச்செடிகளும்உள்ளன. முகப்பு அறையில் நல்ல வசதியான சமான்கள் உள்ளன. அறை நன்கு அலங்கரிக்கப்பட்டிருக்கிறது. தரையிலிருந்து அறை உச்சிவரை பெரிய புத்தக அலமாரி இருக்கிறது. புத்தகங்களை அவர் அதில் அடுக்கி வைத்திருக்கிறார். அவையெல்லாம்பெரும்பாலும் மலிவுப் பதிப்புப் புத்தகங்கள். மாலை நேரத்தில் அரிஸ்டாட்டில் ஷேக்ஸ்பியர், பெர்னார்ட் ஷா முதலியோர் எழுதிய நூல்களையும் உள்நாட்டுப் போர்பற்றிய நான்கு காண்ட வரலாற்றையும் அவர் படிக்கிறார். பீதோவன், மோஸார்ட் போன்றோர் இயற்றிய இசைகளை அவர் [illegible]டுகளில் கேட்டு மகிழ்கிறார். அறையில் கணப் அடுப்பு ஒன்று உண்டு. வருஷத்தில் பத்துமாதம் இது பயன்படுகிறது.

புதிய வசதிகள் எல்லாம் உள்ள சமையல் அறை இருக்கிறது. உணவுப் பொருள்களை குளிர வைத்துப் பாதுகாக்கும் வசதியும் உண்டு. பழங்களையும் காய்கறிகளையும் அவர்கள் பாதுகாத்துக் கொள்கிறார்கள். துணிகளைத் தானே வெளுத்து உலரவைக்கும் இயந்திரங்களும் உண்டு.

ஆறுவயது ஜேன் முதல் 13 வயது ஐவி வரை அவர்களுக்கு நான்கு பெண்குழந்தைகள் இருக்கிறார்கள். ஐவி உயர்நிலைப்பள்ளியில் முதலாண்டு மாணவியாக இருக்கிறாள். வீட்டில் மாடிப்படுக்கை அறை அவளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பதினொருவயதுள்ள [illegible]ள்யூ என்பவளுக்கு ஒரு சிறு தனிப்படுக்கை அறை உண்டு. பத்துவயது [illegible]லேன், ஜேன் ஆகிய இருவரும் ஒருஅறையில் இருக்கிறார்கள். வீட்டில் ஒருநாய் உண்டு. 'ஹேப்பி' என்பது அதன் பெயர். பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் கைச்செலவுக்கு வாரந்தோறும்25சென்ட்கொடுக்கிறார்கள். வீட்டில் விசேஷ வேலைகள் செய்தால் பெரிய பெண்களுக்கு அதிகமாகவும் கொடுக்கிறார்கள். பெரிய பெண்கள் தங்கள் அறைகளைத் தாங்களே துப்புரவாக வைத்துக் கொள்கிறார்கள்; அவர்களது துணிகளுக்கு அவர்களே பெட்டி போடுகிறார்கள். சிறுமி ஜேன், நாய்க்குத் தீனிபோட வேண்டும். நான்கு குழந்தைகளும் நன்கு படிக்கிறார்கள். எல்லாரையுமே கல்லூரிக்கு அனுப்பவேண்டும் என்பது கெல்லியின் ஆசை. செலவுக்குத் தம் சம்பாத்தியமும் சேமிப்பும் போதாவிட்டாலும், பிள்ளைகள் தங்கள் திறமையால் 'ஸ்காலர்ஷிப்' என்ற உபகாரச் சம்பளம் பெறுவார்கள் என்று அவர் நம்புகிறார்.

ஆறு மணிக்கெல்லாம் எழுந்து, காலை உணவு உண்டதும் 6-30 மணிக்கு கெல்லி வேலைக்குப் புறப்படுகிறார். அவர் வீட்டுக்கு அருகேயுள்ள சிலர் சேர்ந்து ஒரு காரில் வேலைக்குப் போகிறார்கள். கெல்லியும் அவர்களோடு சேர்ந்து செல்கிறார். செலவை எல்லோரும் பகிர்ந்து கொள்கின்றனர். கெல்லியின் மனைவி ஏழு மணிக்கு எழுந்து, பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்கிறார்; மதிய உணவு அருந்து முன் வீட்டு வேலைகளைச் செய்கிறார். பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தில் அவர் உறுப்பினர். ஊருக்குப் பக்கத்திலுள்ள பெண்கள் சங்கத்திலும் அவர் ஊக்கம் மிகுந்த உறுப்பினர். பிற்பகல் முழுவதும் மேற்கூறிய வேலைகள் இல்லாவிட்டாலும், கடைக்குப்போகும் அவசியம் இல்லாவிட்டாலும் அவர்வீட்டிலேயே இருந்து புத்தகங்கள் படிக்கிறார். நாவல்கள் அவருக்கு விருப்பம். வீட்டுக்கு 10 சஞ்சிகைகள் வருகின்றன. அவற்றில் மூன்று வார இதழ்கள். அரசியலைப்பற்றியும், உலக வியகாரங்களைப்பற்றியும் பெட்டி கெல்லிக்கு உறுதியான கருத்துகள் உண்டு.

சிறுமி ஜேனைத் தூங்கவைப்பதும் கெல்லியின் வேலை. பின்பு, தம்அறைக்குச் சென்று, இன்னிசை கேட்கிறார். சிறப்பு நிகழ்ச்சி ஒன்றும் இல்லாவிட்டால், யாரும் டெலிவிஷனைத் தொடுவதில்லை.

தொழிலாளர் சங்கம் ஒன்றில் கெல்லி உறுப்பினர். அது மெக்கானிக்குகளின் சர்வதேச சங்கம். ஆட்களைத் தெரிந்தெடுத்து வேலைக்கு வைக்கும் பிரிவும், சிறப்புத் தகுதிக்கு ஏற்பப் பதவி அளிக்கும் ஏற்பாடும் போயிங் கம்பெனியில் உண்டு. "நான் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்தவன்; என் சங்கம் வேலைநிறுத்தம் செய்தால், நானும் வேலைநிறுத்தம் செய்வேன்" என்று கெல்லி சொல்கிறார். பதவி உயர்வுக்கு நெடுங்காலம் வேலை செய்திருப்பதையே முக்கியமாகக் கருதவேண்டும் என்பது எனக்குப் பிடிப்பதில்லை" என்று அவர் கூறுகிறார். அவரது வேலைத் திறமைக்கு ஏ என்னும் முதல் மதிப்புக் கிடைத்திருக்கிறது. ஒரு மெக்கானிக் பெறக்கூடிய மிகவும் உயர்ந்த ஊதியம் அவர் பெறுகிறார். அவரைவிட அதிககாலம் உழைத்தவர்களோடு அவர் வேலை செய்கிறார். அவர்களை விட அவருக்கு அதிக ஊதியம் கிடைக்கிறது. போயிங் விமானக் கம்பெனி சியாட்டில் நகரப் பள்ளிகளோடு ஒத்துழைத்து ஏற்பாடு செய்துள்ள மாலை வகுப்புகளில் கெல்லி பல பாடங்கள் கற்றிருக்கிறார்.

அவரது வேலைக்குப் பாதுகாப்பு உண்டு. மருத்துவ இல்ல இன்ஷ்யூரன்ஸ், வைத்திய இன்ஷ்யூரன்ஸ், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் முதலியவற்றிற்குக் கம்பெனி ஏற்பாடு செய்திருக்கிறது. அவர் வேறு இன்ஷ்யூரன்ஸ்களிலும் சேர்ந்திருக்கிறார். கம்பெனியில் பென்ஷன் திட்டம் ஒன்று உண்டு. மணமாகி 15 ஆண்டுகளில் கெல்லியும் பெட்டியும் பெற்றுள்ள பொருள் செல்வம், அமெரிக்காவின் பொருள் வளத்துக்கு ஒரு உரைகல். அவர்களது குடும்ப வாழ்க்கையும், கெல்லி செய்யும் வேலையின் தன்மையும் நாட்டின் ஆற்றலைக் காட்டுபவையாகும். கெல்லியும் பெட்டியும் நல்ல உழைப்பாளிகள். 'ஜேன் பிறந்த நாள் முதல் கெல்லி ஒரு நாள்கூட வேலைக்குப் போகாமல் இருந்ததில்லை" என்று பெட்டி மகிழ்ச்சியுடன் கூறுகிறார்.

# தாய்மை நிலையில்

பெண்கள் கர்ப்பிணிகளாகிவிட்டால், சுகமாக வாழ்வதற்கும், திடகாத்திரமான குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கும் குறிப்பிட்ட சில உணவுகளை உண்ணவேண்டியது அவசியம். கர்ப்பிணிகளும், குழந்தைக்குப் பால் கொடுக்கும் தாய்மார்களும் உண்ணவேண்டிய சில உணவுகளைக் கீழே தருகிறோம்: எல்லோருக்கும் எல்லா உணவுகளும் கிடைக்காவிட்டாலும் இயன்றவரையில் இவற்றில் சிலவற்றையேனும் உண்பது உங்களுக்கு நன்மையளிக்கும். நீங்கள் முயற்சித்தால் இவ்வுணவுகள் யாவற்றையும் உண்பதற்குக் கூட உங்களுக்கு வசதி ஏற்படலாம்.

தக்காளி, கருமீன் எண்ணெய், பால், வெண்டைக்காய், வற்றாளை, நாட்டரிசிச் சாதம், பூசினி, பருப்பு, பாகற்காய், பப்பாசி, மீன், வாழைப்பழம், தயிர், சர்க்கரைப்பாணி, கருவாடு, இறைச்சி, முட்டை, நெத்தலி, சாறணை, பொன்னாங்காணி, முருங்கையிலை, வல்லாரை, அறைக்கீரை, போஞ்சி.

நம் நாட்டுச் சிகிச்சை நிலையங்கள் பலவற்றில் கொழுப்பில்லாத பால்மாவும், மீன் எண்ணெயும், இரத்தபுஷ்டிக்கான மாத்திரைகளும் கர்ப்பிணிகளுக்கு வழங்கப்படுகின்றன. இவற்றை விரும்பும் தாய்மார்களுக்கு இவை இலவசமாகவே வழங்கப்படுவதால், நீங்கள் கட்டாயமாக இவற்றை வாங்கிஉட்கொண்டு பலமடைய வேண்டும்

கர்ப்பிணிகள் பால், பழரசம், தண்ணீர் ஆகியவற்றைப் பருக வேண்டியது அவசியமென்று வைத்தியர்கள் கருதுகிறார்கள். இது அநேகருக்குத் தெரியாது. சிலருக்குத் தெரிந்தாலும் அவர்கள் கவனிப்பதில்லை. கர்ப்பிணிகள் ஒவ்வொரு நாளும் குறைந்தது இரண்டு கிளாஸ் பால் அருந்தவேண்டும். பசுப்பால், சிகிச்சை நிலையத்தில் கொடுக்கப்படும். பால்மா, தேசிய பாற்சபை வழங்கும் பால் என்பவற்றை நீங்கள் அருந்தலாம். பாலை நன்றாகக் காய்ச்ச மறந்துவிடவேண்டாம். பழரசம் கிடைக்கக் கூடியவர்கள் அருந்தலாம். தண்ணீர் அருந்தும்போது அது சுத்தமாக இருக்கிறதா என்பதைக் கவனித்துக்கொள்ளுங்கள். கர்ப்பிணிகளுக்கு ஓய்வு அவசியம்.

வசதியில்லாதவர்களும் பழக்கப்பட்டுப் போனவர்களும் கடைசிவரையும் கடுமையாக வேலை செய்துவருவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறது.

(8-ம் பக்கம்பார்க்க)

# புடலங்காய் வறை

—சகு—

புடலங்காய் என்றவுடன் ஞாபகத்தில் வருவது இனித்த ஒரு பால் கறி, அல்லது ஒரு தூள் கறி. இப்படி ஒரே முறையான கறிகளைச் சமைப்பதினால் இதை உண்பவர்களுக்குக் கூட ஒருவித வெறுப்பு ஏற்பட்டுவிடுகின்றது. புடலங்காயில் ஒரு வறை வைத்தால் என்ன? இதோ வறை வைக்கும் முறை:-

முதலில் புடலங்காயைச் சுத்தப்படுத்திச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கவும். பின்பு சிறிது தண்ணீர் விட்டு புடலங்காயை அவிக்கவும். புடலங்காயை அவிக்கும்பொழுது அதிக தண்ணீர் விட்டால் அதன் சுவை குறைந்துவிடும். தண்ணீர் வற்ற நன்றாகப் புடலங்காயை அவித்தபின், சிறிது தேங்காய்ப்பூ, வெங்காயம், பச்சை மிளகாய், உப்பு ஆகியவற்றைப் புடலங்காயுடன் கலந்து பாத்திரத்தை மூடிவிடவும்.

பின்னர் ஒரு பச்சை முட்டையை அடித்து இப்புடலங்காய் வறையில் ஊற்றிக் கிளறவும். இறால் உண்பவர்கள் சிறிது இறாலை அவித்தோ, அல்லது எண்ணெயில் பொரித்தோ புடலங்காய் வறையுடன் சேர்த்துக் கிளறினால் அதன் சுவையே தனி! இவ்வறைக்கு எண்ணெ சிறிது மணத்திற்காக ஊற்ற விரும்பினால், சிறிது ஊற்றவும்.

## செல்வி வில்லிஸ் போகமாட்டார்

கொழும்பு, செவ்வாய்

முன்னர் திட்டமிட்டபடி இலங்கையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் செல்வி பிரான்ஸிஸ் வில்லிஸ் இம்மாதம் 8-ம் திகதியுடன் விடுமுறையைக் கழிப்பதற்காகத் தாய்நாட்டுக்குச் செல்லமாட்டாரென்று தெரிகிறது.

அவரது பயணம் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாம்.

பிரீடம் மார்க் கற்பூரம்




கற்பூரம் வாங்கும்போது 'பிரீடம்' மார்க் கற்பூரம் என்றே கேட்டு வாங்குங்கள். இது ஓர் சிறந்த தயாரிப்பு

தயாரிப்பாளர்கள், பிரீ லங்கா இண்டஸ்ட்ரீஸ். மினுவாங்கொட.

# பிரிவுச் சாம்பியன்கள் 10ந்திகதி போட்டி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்கம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட இரு கோஷ்டிகளுக்குமான வெற்றிக் கிண்ணங்கள் இம்மாதம் 10-ம் திகதி நடைபெறவிருக்கும் பரிசளிப்புவிழாவில் வழங்கப்படவிருக்கின்றன.

வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சி வெள்ளிக்கிண்ணங்களை வழங்குவார் யாழ்ப்பாணம் எம். பி. திரு. அல்பிரட் துரையப்பா தமது தந்தையின் ஞாபகார்த்தமாக வழங்கும் வெற்றிக்கிண்ணம் 'பி' பிரிவுச் சாம்பியனான முனிசிபல் கோஷ்டிக்கு வழங்கப்படவிருக்கிறது. 'ஏ' பிரிவுச் சாம்பியனான கல்வி இலாகாவுக்கு அரசாங்க ஊழியர் விளையாட்டுச் சங்க வெற்றிக் கிண்ணம் வழங்கப்படும்.

பரிசளிப்பு விழா அன்று இரு உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன. 'பி' பிரிவுச் சாம்பியனான முனிசிபல் கோஷ்டிக்கும் தெரிவுக் கோஷ்டிக்குமிடையே ஒரு போட்டியும் 'ஏ' பிரிவுச் சாம்பியனான கல்வி இலாகாவுக்கும் தெரிவுக் கோஷ்டிக்குமிடையே மற்றொரு போட்டியும் நடைபெறவிருக்கின்றன. இப்போட்டிகள் யாவும் பொலிஸ் மைதானத்தில் மாலை மூன்றரை மணிக்கு ஆரம்பமாகும்.

## சமஷ்டிக் கட்சியின் கிளை

உடுப்பிட்டி, செவ்வாய்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உடுப்பிட்டி மாவட்டக் கிளை அங்குரார்ப்பணவிழா சமீபத்தில் நடைபெற்றது கிளை நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க. ஜெயக்கொடி, உப- தலைவர்கள் திருவாளர்கள் க. தம்பையா, மு. க. தம்பையா, காரியதரிசி திரு. நா. செல்லையா, உதவிக் காரியதரிசி திரு. க. சற்குணம், தனாதிகாரி திரு. கி. மயில்வாகனம், உப-தனாதிகாரி திரு. க. பொன்னுச்சாமி. நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

கட்டைவேலி, உடுப்பிட்டி கிராமச் சங்கங்களுக்குக் கட்சி அபேட்சகரை நிறுத்திப் போட்டியிடுவதென முடிவு செய்யப்பட்டது. அதற்காக 6 பேரைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

## ரூ. 50, 000 மேலதிக செலவு

### கல்வி இலாகாவுக்கு ஏற்படும்

கொழும்பு, செவ்வாய்

ஆசிரியர்களுக்குச் சம்பளம் வழங்குவதற்கான புதிய திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு கல்வி இலாகாவுக்கு ஆரம்பத்தில் மேலும் 50,000 ரூபாய் செலவு ஏற்படும்.

பாடசாலைத் தலைமையாசிரியர்களுக்கும் அதிபர்களுக்கும் 16,000 ஆள் அடையாள அட்டைகள் தயாரிப்பதற்கு இச் செலவு ஏற்படும்.

இந்த அட்டைகள் அந்தந்தப் பகுதி உதவி வித்தியாதிபதிகளின் கையொப்பத்துடன். தலைமையாசிரியர்கள், அதிபர்களின் புகைப்படத்துடன் கச்சேரிகளிலும் மக்கள்வங்கிக் கிளைகளிலும் வைக்கப்படும்.

டெஸ்ட் கிரிக்கெட்

## இங்கிலாந்து வெற்றி

வெலிங்டன், மார்ச் 4

இங்கிலாந்துக்கும் நியுஸிலாந்துக்குமிடையே நடைபெற்ற 2-வது கிரிக்கெட் டெஸ்ட்போட்டியில் 1 இன்னிங்ஸ் 47 ஓட்டங்களால் இங்கிலாந்து வெற்றிபெற்றது

இங்கிலாந்து 8 விக்கட் நஷ்டத்திற்கு 428 ரன்கள் எடுத்தது. நியுஸிலாந்து முதல் இன்னிங்ஸில் 194 ரன்களும் 2-ம் இன்னிங்ஸில் 187 ரன்களும் எடுத்தது.

## சிநேகபூர்வ கிரிக்கெட் ஆட்டம்

உரும்பராய், திங்கள்

உரும்பராயைச் சேர்ந்த நாதன் கோஷ்டிக்கும் ஓடையடிக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கெட் ஆட்டத்தில் ஓடையடிக் கோஷ்டி 42 ஓட்டங்களால் நாதன் கோஷ்டியை தோற்கடித்தது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### புதன் 6-3-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிபபதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 கிளாரினெட்.

இரவு 7-00 நேயர் விருப்பம், 7-30 ருத்திராணி நல்லநாதன்–பாட்டு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 எஸ். வன்னியசிங்கம்-பேச்சு, 9-30 வி. சுந்தரம்-பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 1-00, இரவு 7-15)

காலை 6-45, மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 செய்திக் குறிப்புகள், 7-35 மணித்திருநாடு (சென்னை அஞ்சல்)

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-30 வார்த்திய இசை, 1-50 மெல்லிசை, 2-10 உயர்தரப் பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செய்தி அரங்கம், 7-45 'நிபந்தனை'-நாடகம், 8-00 கோட்டு வாத்தியஇசை, 9-15 கல்லுரை, 9-50 இசைமாலை.

## மண்சரிவில் 6 பேர் பலி

பங்களூர், மார்ச். 5

பங்களூருக்குச் சமீபத்தில் உள்ள ஒரு இடத்தில் நிலத்தில் குழாய்கள் தாட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்களில் ஆறுபேர் மண்சரிவில் சிக்கி உயிர்துறந்தனர்.

## தொழிலாளர் கோஷ்டி வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் சிங்கவிளையாட்டுக் கழகம் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நடத்திய கிரிக்கட் போட்டியில் தொழிலாளர் கோஷ்டி 38 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. தொழிலாளர் கோஷ்டி முதலாம் இன்னிங்சில் 89 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்சில் 51 ஓட்டங்களும் எடுத்தது. மாணவர் கோஷ்டி முதலாம் இன்னிங்சில் 47 ஓட்டங்களும், இரண்டாம் இன்னிங்சில் 55 ஓட்டங்களும் எடுத்தது.

இ போட்டிக்கு திருவாளர்கள் தேவராசா, அல்பிரட் ஆகியோர் மத்தியஸதர்களாகக் கடமையாற்றினர்.

## திரைப்படங்களில் ரூ. 150 லட்சம்

புதுடில்லி மார்ச் 4

1961—62-ம் ஆண்டில் பாரத திரைப்படங்கள் மூலம் ரூ. 150 லட்சம் அந்நியச் செலாவணி கிடைத்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.





விலை மலிவானாலும் ஸல் வெறும் சாதாரண மோல்டட் பால் அல்ல. ஆமாம்! ஸல் சிறப்பான போஷாக்குச் சத்தும் பாலாடையின் சுவையும் கொண்டது—அது மிகவும் இனிப்பானது, மற்றும் ஒரு நொடியில் கரைந்துவிடுகிறது. உங்கள் டீயுடனோ, கோப்பியுடனோ பாலுக்குப் பதில் ஸல்லை சேர்த்துக்கொண்டு பருகுங்கள். அதன் பாலாடையின் நற்சுவையுடன் கூடிய இனிப்புக்கு மேல் தனியாகச் சீனி சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை என்றே சொல்லலாம்! ஸல்லை வெறும் நீரில் கரைத்தால் பால் பானமாகிறது—அப்பொழுது அதன் நற்சுவையின் பூரண தன்மையை நன்றாக உணர்வீர்கள்! ஸல்லினுடைய தெவிட்டாத சுவையை நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள் என்பது திண்ணம்.

**ஸல் உடன் கரையும் மோல்டட் பால்**

குடும்பத்தார் உடன் விரும்புவது

— ஹார்லிக்ஸ் தயாரிப்பாளர்களால் தயாரிக்கப்பட்டது

# பாகிஸ்தானுக்கு மீண்டும் இந்தியா ஆட்சேபம்

## ‘13,000 சதுரமைல் பிரதேசம் சீனவிடம் சேருகிறது

புதுடில்லி, மார்ச் 5

**சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தம் சப்பந்தமாக பாகிஸ்தானுக்கு மீண்டும்ஒரு ஆட்சேபக்குறிப்பை இந்தியா அனுப்பிவைக்கவிருக்கிறதென்று இந்தியப் பிரதமர் நேரு இன்று லோகசபையில் தெரிவித்தார்.**

சீன-பாகிஸ்தான் எல்லை ஒப்பந்தத்தின்படி, பாகிஸ்தான் காஷ்மீரில் சட்டவிரோதமாக பிடித்துவைத்துக்கொண்டுள்ள பகுதியிலிருந்து பதின்மூவாயிரம் சதுரமைல்களுக்கு மதிகமான பிரதேசம் சீனர் வசமாகிவிடுமென்றும் இது பாகிஸ்தான் சென்றவருஷம் வெளியிட்ட தேசப்படத்திலிருந்து தெளிவாகியுள்ளதென்றும் பிரதமர் நேரு கூறினர்.

பாகிஸ்தான்—சீன எல்லை ஒப்பந்தம் சம்பந்தமாக லோகசபையில் இன்று கொண்டுவரப்பட்ட கருத்துப் பிரேரணையையொட்டி பிரதமர் ஒரு அறிக்கைவிடுத்தார்.

அந்த அறிக்கையில், "பாகிஸ்தானுடன் நியாயமான கௌரவமான ஓர் உடன்பாட்டுக்கு வரவிரும்புகிரேம். இதன் காரணமாக காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக இம்மாதம் 12-ந் திகதி கல்கத்தாவில் நடைபெறவிருக்கும் நான்காவது சுற்றுப பேச்சுவார்த்தைகளில் இந்தியா கலந்து கொள்ளும்" என்று பிரதமர் நேரு கூறினர்.

"பாக்.சீன எல்லை ஒப்பந்தம் தற்காலிகமானது என்று இருதரப்பாரும் கூறுகின்றனர். ஆனல் இந்த ஒப்பந்தத்தை முடித்துக்கொள்ள இருதரப்பினரும் அவசரம்காட்டினர். இந்த ஒப்பந்தத்தை ஊர்ஜிதம் செய்யவேண்டியதில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஒப்பந்தத்தைப்பற்றி ஆராய்வதற்கு பாகிஸ்தான் சட்ட சபைக்கோ, பத்திரிகைகளுக்கோ சந்தர்ப்பம் கொடுக்கப்படவில்லை" என்று பிரதமர் கூறினர்.

குறிப்பிட்டார்.

காஷ்மீர் பிரச்னையில் சீன தலையிட்டு தனது பிரதேசவிஸ்தரிப்பு நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ள முயற்சிசெய்கிறது என்றும் பாகிஸ்தான், இந்திய உறவுகளில் சீன தலையிடுவதன்மூலம் உலக அமைதியையும் ஆசிய சமாதானத்தையும் எப்படி நிலைநாட்ட முடியுமென்றும் பிரதமர் நேரு

---

## மற்றவரும் மரணம்

### மாவிட்டபுர சம்பவம்

மாவிட்டபுரம், செவ்வாய்

மாவிட்டபுரம் மரத்தடி ஒழுங்கையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் கடும் காயங்களுடன் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டிருந்த கந்தையா நவரத்தினம் என்பவர் இன்று ஆஸ்பத்திரியில் மரணமானர். இச் சம்பவத்தில் ஸ்தலத்திலேயே ஒருவர் மரணமானதுவாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

மேற்குறிப்பிட்ட சம்பவம் சம்பந்தமாக யாழ்ப்பாணம் சட்டவைத்திய அதிகாரியை பரிசோதனை நடத்துமாறு மல்லாகம் மாஜிஸ்ரேட் உத்தரவிட்டுள்ளார்.

---

## உலக வங்கி அதிகாரி தேசாய் சந்திப்பு

புதுடில்லி, மார்ச் 5

உலக வங்கியின் தெற்கு ஆசிய, மேற்கு ஆசிய டைரக்டர் இன்று நிதிமந்திரி திரு. மொரார்ஜிதேசாயைச் சந்தித்துப் பேசினர்.

இந்தியாவுக்கு உதவும் நாடுகளின் கூட்டம் அடுத்த மாதம் வாஷிங்டனில் நடைபெறவிருப்பதாகவும் அவர் கூறினர். நாளை மீண்டும் அவர் நிதிமந்திரியைச் சந்திப்பார்.

---

## மரண அறிவித்தல்

சுருவில் இளையதம்பியின் மூத்த மகனும், மாணிக்கம், நீர்கொழும்பு வர்த்தகர் இ. நல்லதம்பி, கொழும்பு வர்த்தகர் சண்முகம், சுப்பிரமணியம், திருமதி மாணிக்கம் ஆகியோரின் அருமைச் சகோதரரும் எகெலியகொடை வர்த்தகர் தம்பியப்பா சண்முகலிங்கத்தின் மாமனருமாகிய இ. சிற்றம்பலம் 5–3–63 இரவு 7 மணியளவில் காலமானர். தகனக் கிரியைகள் 6-3-63 புதன் கிழமை பிற்பகல் 4 மணியளவில் சுருவில் மயானத்தில் நடைபெறும்.

இ. சுப்பிரமணியம்

---

## ஐ. நா. உணவு . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உலக உணவுத் திட்டத்தின் பிரகாரம் அபிவிருத்தி அடைந்த நாடுகளிடம் உள்ள தேவைக்கு மிஞ்சிய உணவு வகைகளைப் பெற்று, உணவு விவசாய ஸ்தாபனம் அப்பொருள்களை வளர்ச்சி அடைந்து வரும் ஐ. நா. அங்கத்துவ நாடுகளுக்கு பகிர்ந்து வருகிறது. இலங்கையும் ஐ. நா. அங்கத்துவ நாடென்ற ஹோதாவில், உணவு உதவி தருமாறு கேட்கவிருக்கிறது. ஐ. நா. அங்கத்துவ நாடுகளாயுள்ள அபிவிருத்தி அடைந்த நாடுகளிடமே உணவு ஸ்தாபனம் மேலதிக உணவு வகைகளைப் பெற்று பின்னர் பகிர்ந்தளிக்கிறது.

---

சிங்களத் தகுதிப்பரீட்சை

# மேயரின் சுற்றுநிருபம் பற்றி கமிஷனரிடம் விபரம்

## ஸ்தலஸ்தாபனகமிஷன்கேட்கும்

கொழும்பு, செவ்வாய்

இம் மாதம் 2-ந் திகதி நடைபெற்ற சிங்களத் தகுதிப் பரீட்சை எழுதுவதற்கு யாழ்ப்பாணம் மாநகரசபை ஊழியர்கள் எத்தனை பேர் விரும்பினர்களென்றும், எத்தனைபேர் பரீட்சை எடுக்க அனுமதிக்கப் பட்டார்களென்றும் விபரமான ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு யாழ்ப்பாணம் மாநகர சபைக் கமிஷனரை ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் கேட்கவிருக்கிறது.

மாநகரசபை ஊழியர் எவருப் சிங்களத் தகுதிப் பரீட்சை எழுதுவதற்கு ‘கடமை லீவு’ வழங்கப்படமாட்டாது என்று சென்ற வெள்ளிக்கிழமை மாநகரசபை ஊழியருக்கு மேயர் டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் விடுத்த சுற்றுநிருபத்தின் விளைவாக ஸ்தலஸ்தாபனசேவைக் கமிஷன் இவ்விதம் கமிஷனரிடம் அறிக்கை கோரவிருக்கிறது.

ஸ்தலஸ்தாபன சபை எதுவும் அந்தச் சபையின் தீர்மானத்துக்கிணங்க, சபையின் அலுவல்களை விரும்பிய மொழியில் நடத்த உரிமையுண்டென்றும், ஸ்தலஸ்தாபனசேவைக் கமிஷன் அளித்துள்ள வசதிகளின்படி ஸ்தலஸ்தாபன ஊழியர் தமது பதவி உயர்வுக்காக தேர்ச்சி பெறுவதற்கு தடைசெய்வதற்கு சபைக்கு அதிகாரமில்லையென்றும் ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் வட்டாரங்கள் தெரிவித்தன.

மாநகரசபைக் கமிஷனர் தமது அறிக்கையைச் சமர்ப்பித்த பின் அடுத்து என்ன நடவடிக்கை என்பது பற்றி ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷன் தீர்மானிக்கும்.

---

## தாய்மை நிலையில்..

(6ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய பெண்களுக்கு நோய் வந்தால் ஆபத்தாகவும் முடியலாம். ஆகவே கர்ப்பிணிகள் யாவரும் தமது உடல் நிலையைப் பேணுவதற்கு ஓய்வெடுக்கவேண்டுமென்ற பொது விதியை அனுசரிக்கவேண்டும்.

கர்ப்பிணிகள் இரவில் 8 மணித்தியாலங்களும் பகலில் குறைந்தது 2 மணித்தியாலங்களேனும் சௌகரியமாகக் கால்களை நீட்டிப் படுத்து உறங்க வேண்டும்.

நீங்கள் சுகதேகிகளான பிள்ளைகளைப் பெற்ருலே நாடு முன்னேற்றமடையும். உங்கள் பிள்ளைகள் சுகநலமற்றவர்களாயிருந்தால் அது நாட்டுக்கும், அரசாங்கத்துக்குமே பெரிய பிரச்னையாகிவிடுகிறது.

— ‘சுகமணி’

---

## நம்பிக்கையில்லாத் . . .

யில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளதெனவும் மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்துள்ள வரான திரு. துரைராஜசிங்கம் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருவதில் அர்த்தமில்லை என்றும் கூறினர்.

திரு. என். தேவபாலசுந்தரம் பேசுகையில் கூறியதாவது: திரு. துரைராஜசிங்கம் மீது கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் அடுத்த மேயர் பதவியைக் கருத்தில் கொண்டே உருவாக்கப்பட்டது என்ருர்.

திரு. ஏ. ஜி. ராஜசூரியர், திரு. பி. ச. சோமசுந்தரம், திரு. எம். யேக்கப், ஏ. நடராச, அபுசாலி, திரு. என். டி. செல்லத்துரை, டி. எஸ். துரைராஜா, ஜே. எஸ். அழகையா, சோ. இராசரத்தினம ஆகியோரும் பேசினர். டாக்டர் தர்மலிங்கம் பேசும் போது இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு அடுத்து வரும் தேர்தல் ஒரு காரணம் என்பதனை ஒப்புக் கொண்டார்.

திரு. துரைராஜசிங்கம் பதில் அளித்துப் பேசினர். அவர் தமது பேச்சில் கடந்த காலத்தின் தனது சேவைகளை நினைவுப் படுத்தி நன்றி கூறினர். கூட்ட ஆரம்பத்தில் உறுப்பினர்கள் 15 பேரும் சமூகமளித்திருந்தனர். இடையில் ஜனப் எம். எம். சுல்தால் கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கைச்சாத்திட்டனுப்பியவர்கள் அனைவரும் தீர்மானத்தை ஆதரவாக வாககளித்தனர். தீர்மானத்திற்கு எதிராக திருவாளர்கள் என். தேவபாலசுந்தரம், சி. எஸ். நடராசா, ஏ. ஜி ராஜசூரியர், ஹாஜி. இ. எம். எம். அபுசாலி, எம். யேக்கப் ஆ. துரைராஜசிங்கம் ஆகியோர் வாக்களித்தனர்.

தீர்மானத்தை ஊர்ஜிதம் செய்யும் கூட்டம் நடைபெறுவதற்கு முன் தாம் ராஜினமாச் செய்துவிடப்போவதாயும் உதவி மேயர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

---

## கிராமசேவகர்களுக்கு பயிற்சிவகுப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கிராமசேவகர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள 110 பேரும் யாழ்ப்பாணக் கச்சேரியில் கற்போது பயிற்சி பெற்று வருகிறுர்கள்.

இவர்களுக்கு வை. எம். சி. ஏ. கட்டடத்தில் இம் மாதம் 15-ம் திகதியிலிருந்து விரிவுரைகள் நிகழ்த்த ஏற்பாடாகியுள்ளது. இந்த விரிவுரை வகுப்பை அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சி ஆரம்பித்துவைப்பார்.

பத்து பேர் கொண்ட குழுக்களாக கச்சேரியின் பல பிரிவுகளிலும் பயிற்சி பெற்று வரும் கிராமசேவகர்களிற் சிலர் சில பிரிவுகளில் ஆசன வசதியின்றிக் கஷ்டப்படுவதாகத் தெரிகிறது.

---


விரைவில் எதிர்பாருங்கள் !

வீர காவியம் !!

சினிமாஸ் திரைகளில்

புதுமையான காதல் ! புரட்சிகரமான வீரம்!!

திகைப்பூட்டும் திரைகடல் ஓவியம் !!!

★ பார்த்தோர் பரவசப்படுகிருர்கள்

★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிருர்கள்!

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்காராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணாநிதி




மற்றும் பலர் நடிக்கும்

பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) எம். ஜி. ஆர். பி. எஸ். சரோஜா நடித்த **புதுமைப்பித்தன்**

மனோகரா (யாழ்ப்பாணம்) சிவாஜி கணேசன் சரோஜா தேவி நடித்த **பாலும்பழமும்**


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 53-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 6-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.